# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

**19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),**
**Egmore, Chennai – 600 008.**
**Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377**
**Email : tnercmail@gmail.com Web site : www.tneo.gov.in**


**முன்னிலை: திரு.ஆ. தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 49/2015**

திரு. G.கலைச்செல்வி,
க/பெ.கோபாலகிருஷ்ணன்,
45/1, கீழப்புதூர்,
பாலக்கரை,
திருச்சிராப்பள்ளி . . . மேல்முறையீட்டாளர்
(திரு. ஜெயப்பிரகாஷ், வழக்கறிஞர்)

எதிர்

1. செயற் பொறியாளர்/இ&ப/நகரியம்,
   திருச்சி மின்பகிர்மான வட்டம்/மாநகரம்,
   தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
   தென்னூர்,
   திருச்சி –17.

2. உதவி செயற் பொறியாளர் / இ &ப/பாலக்கரை,
   திருச்சி மின்பகிர்மான வட்டம்/மாநகரம்,
   தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
   தென்னூர்,
   திருச்சி –17.

3. உதவி பொறியாளர் / இ &ப/செந்தண்ணீர்புரம்,
   திருச்சி மின்பகிர்மான வட்டம்/மாநகரம்,
   தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
   தென்னூர்,
   திருச்சி –17 . . . . . எதிர்மனுதாரர்கள்

(i) திரு.ராஜேந்திர விஜய்/செயற்பொறியாளர்/நகரம்/திருச்சி –6.10.15
(ii) திரு. A.T. சேகர், உதவி செயற்பொறியாளர்/பாலக்கரை – 6.10.15
(iii) திரு. N. கணேசன், இளமின்பொறியாளர்/செந்தண்ணீர்புரம்– 6.10.15
5.11.15 & 6.1.16

4. திரு. எஸ். சேதுராமன்,
த/பெ சீனிவாசன்,
45/1, கீழபுதூர் 6வது தெரு,
பாலக்கரை, திருச்சிராப்பள்ளி–1 ..... Impleaded

(திரு. எஸ். சேதுராமன்)

**<u>கேட்புரை நாள் : 06–10–2015, 5.11.2015 & 6.1.2016</u>**

**<u>ஆணை நாள் : 17–02–2016</u>**

திரு. G. கலைச்செல்வி, க/பெ கோபாலகிருஷ்ணன், அவர்களின் 12.6.2015 நாளிட்ட மனு மேல் முறையீட்டு மனு எண் 49/2015 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுவின் மீது மின் குறைதீர்ப்பாளரின் கேட்புரை 6.10.2015, 5.11.2015 மற்றும் 6.1.2016 ஆகிய நாட்களில் நடத்தப்பட்டது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள் மற்றும் எழுத்துப்பூர்வமான வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள், கேட்புரையின் பொழுது இரு தரப்பினராலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் மற்றும் மின் இணைப்பு பெற்றுள்ள திரு. எஸ். சேதுராமனின் வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறை தீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## <u>ஆணை</u>

### 1. <u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:</u>

திரு. எஸ். சேதுராமன், பெயரில் வணிக பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ள மின்இணைப்பு எண்.209–149–1411–ஐ மின்துண்டிப்பு செய்ய வேண்டும் மற்றும் திரு. திருவேங்கடம், உதவி பொறியாளர்/செந்தண்ணீர்புரம் அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரியுள்ளார்.

## 2. <u>வழக்கின் சுருக்கம்:</u>

2.1. திரு. எஸ். சேதுராமன், அவர்களின் பெயரில் வணிக பயன்பாட்டிற்காக மின்இணைப்பு எண்.209–149–1411 கதவு எண்.45/1, 6வது தெரு, கீழப்புதூர் என்ற முகவரியில் உள்ள வளாகத்திற்கு 11.10.2013 அன்று மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

2.2. மேல்முறையீட்டாளர் தனக்கு சொந்தமான மேற்படி வீட்டில் திரு. எஸ்.சேதுராமன் பெயரில் உதவி மின்பொறியாளர்/செந்தண்ணீர்புரம் அவர்கள் மின் இணைப்பு வழங்கியுள்ளதால் மேற்கண்ட மின்இணைப்பை துண்டிக்க வேண்டும் என்றும் உதவி பொறியாளர்/செந்தண்ணீர்புரம் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று திருச்சி மின்பகிர்மான வட்டம்/மாநகரத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு மனு செய்துள்ளார். மன்றம் மேற்கண்ட மனுவுடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களை பரிசீலனை செய்து சட்டகுழுமம், சென்னை அவர்களது கருத்துரு பெற்று அதன்படி நடக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

2.3. மேற்கண்ட மன்றத்தின் ஆணையில் அதிருப்தியுற்ற மேல்முறையீட்டாளர், இந்த மேல்முறையீட்டு மனுவை மின்குறைதீர்ப்பாளர் முன்பாக சமர்ப்பித்துள்ளார்.

## 3. <u>மேல்முறையீட்டாளரின் மனு மற்றும் 2.9.2015 நாளிட்ட மனுவிலுள்ள வாதங்கள்:</u>

3.1. விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவு சட்டத்திற்கும் சாட்சியத்திற்கும் இயற்கை நியதிக்கும் புறம்பானதாகும்.

3.2. மேல்முறையீட்டாளரின் வாதத்தில் எதிர்மனுதாரர்கள் பல்வேறு ஆவணங்களை மறைத்து மூன்றே ஆவணங்களை எஸ். சேதுராமன் தாக்கல் செய்ததாக குறிப்பிட்டும், நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் கவனத்தில் கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

3.3. எதிர்மனுதாரர்கள் உரிய அதிகாரம் படைத்த அமைப்பு–நீதிமன்றம் உத்தரவிட்டால் தான் இணைப்பினை துண்டிக்க முடியும் என்று கூறும் வாதத்தை ஏற்று உரிய அதிகார அமைப்பு

இருந்தும் மேல்முறையீட்டாளர் ஆவணங்களை சட்டக்குழுமம் சென்னை அவர்கள் கருத்து பெற்று அதன்படி நடக்குமாறு எதிர்மனுதாரர்கள் உத்தரவிட்டது இந்த மண்ணின் நியதிக்கு புறம்பானது ஆகும்.

**3.4.** தகவல் அறியும் உரிமைச்சட்டத்தில் எஸ். சேதுராமன் மின்இணைப்பு பெறுவதற்காக கீழ்கண்ட ஆவணங்களை சமர்ப்பித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. 3.6.1983 முத்துலெட்சுமி எழுதிய உயில்
2. முத்துலெட்சுமி அம்மாள் இறப்பு சான்றிதழ்
3. இருப்பிட சான்றிதழ்
4. இந்திய ஆதார் அட்டை
5. செட்டில்மெண்ட் பத்திரம் 26.4.1980 கோ. ஜெயராம கோனாரால் மனைவி முத்துலெட்சுமிக்கு எழுதியது.
6. FTC No.I O.S.No.85/2008–ன் தீர்ப்பு நகல் இவற்றுடன் ஈட்டுறுதி பிணைமுறி பத்திரம் இணைக்கப்பட்டுள்ளது. மேலும், இவை அனைத்தும் சேதுராமன் கொடுத்த விண்ணப்பத்துடன் கொடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. நுகர்வோர் குறைதீர் மன்றம் கவனத்திற்கு கொண்டு சென்றும் எதிர்மனுதாரர்கள் மறைத்து தாக்கல் செய்யாமல் விட்டதை நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை.

3.5. Indeminty Bond-ல் சேதுராமன் தெரிவித்துள்ள சொத்து தனக்கு சொந்த மென்று இவ்வாறு தெரிவித்துள்ளார். “WHEREAS the consumer has taken on lease the premises in Door No45/1, 6th Street, for the purpose of commercial from Thiru. M.S. Sethuraman, S/o Srinivasan residing at No.45/1 , 6th Street, Keelapudhur who is the owner of the above said premises.

And whereas the consumer has approached the said owner of the premises to give his consent in writing to avail of a service connection in his name for the purpose of his business.

And whereas the said owner is not available has refused to give his consent in writing for the purpose."

3.6. ஈட்டுறுதி பிணைமுறி பத்திர ஆவணத்தில் தான் வீட்டில் உரிமையாளர் என்று கூறிவிட்டு அதற்குரிய ஆவணங்களை கொடுத்துவிட்டு தன்னை தானே பார்க்க முடியாமல் போகிவிட்டதால் தனக்கு மின்இணைப்பு வேண்டும் என்று பொய் தகவல் தெரிவித்துள்ளார். தமிழ்நாடு மின்பகிர்மான விதி தொகுப்பு 27(4) பொருந்தாது என்று கூறியும் குறைதீர்மன்றம் கருத்தில் கொள்ளவில்லை.

3.7. மேல்முறையீட்டாளர் ஜி. கலைச்செல்வியின் அனுபவத்திலும் கட்டுப்பாட்டிலும் உள்ள வீட்டில் எஸ். சேதுராமன் வீடு சொந்தமாக இருப்பதாக கூறி திரு. திருவேங்கடம் உதவி மின் பொறியாளர்/இ&ப/செந்தண்ணீர்புரம் தனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தை உள்நோக்கத்தோடு எஸ். சேதுராமனுடன் கூட்டு சேர்ந்து கொண்டு மேல்முறையீட்டாளரின் சொத்தை அபகரிக்கும் நோக்கத்துடன் வணிக பயன்பாட்டிற்கு மின் இணைப்பை அத்துமீறி நுழைந்தவருக்கு கொடுத்துள்ளார். மின் இணைப்பு கொடுத்ததற்காக எதிர்மனுதாரர்கள் போலியாக உள்ள ஆவணத்தினை பரிசீலிக்கமால் மின்இணைப்பு கொடுத்துள்ளனர். Act 32 of 1959 has inserted sub section 6 to section 12 that occupier means a person in lawful occupation of that building. அதில் கூறப்பட்டவாறு இல்லாத ஒருவருக்கும் இடத்தில் அத்துமீறி நுழைந்தவருக்கும் மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. இது முற்றிலும் சட்டவிரோதமான செயலாகும். விசாரணை நீதிமன்ற சட்டத்திற்கு புறம்பாகவும் சாட்சியங்களுக்கு புறம்பாகவும் இயற்கை

நீதிக்கு புறம்பாகவும் உத்தரவிட்டுள்ளது. சட்டக்குழு கருத்துரை இதுவரை தெரியவில்லை.

3.8. திரு. எஸ். சேதுராமன் மற்றும் அவர்களின் வகையாறாக்கள் மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டு குற்ற எண்.929/2012 திருச்சி குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது. முதல் தகவலறிக்கை போடப்பட்டு குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் திரு. திருவேங்கடம் உதவி பொறியாளர்/இ&ப/ செந்தண்ணீர்புரம், வீடு திரு. எஸ் சேதுராமனின் கட்டுப்பாட்டில் இருப்பதாக போலி ஆவணங்கள் மற்றும் தேதியிடப்படாமல் பொறுப்புறுதி ஆவணம் ஆகியவற்றை தயாரித்து மின் பகிர்மான கழகத்தின் நற்பெயரை கெடுக்கும் வகையில் அத்துமீறி நுழைந்தவருக்கு கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர் என்று வணிக பயன்பாட்டிற்குரிய மின்இணைப்பை அத்துமீறி நுழைத்து சேதுராமனுக்கு கொடுத்துள்ளார் ஆவணங்களின் நெறிமுறைப்படி பொறுப்புறுதி ஆவணம் அளிப்பவர், தேதி, மாதம், ஆண்டு இல்லாமல் பெற்றதிலிருந்தே திரு.திருவேங்கடம் உள்நோக்கத்தோடு செயல்பட்டுள்ளார். பொது நீதிக்கு புறம்பாக ஒருதலைப்பட்சமாக அவரது செயல் அமைந்துள்ளது என்பது தெளிவாகிறது.

3.9. இது குறித்து பாலக்கரை காவல்நிலையத்ல் 4.12.2013ம் தேதி சேதுராமன் மற்றும் திருவேங்கடத்தின் மீது புகார் கொடுக்கப்பட்டுள்ளது. அதன் மீது உயர்நீதிமன்றத்தில் Crl.O.P.No.7717/2014 என்ற எண்ணில் தாக்கல் செய்து அதன் மீது சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையும் 3.6.2014ம் தேதி உத்தரவு வழங்கியுள்ளது. உத்தரவில் மேல்முறையீட்டாளர் மின் பகிர்மானத்தின் வழியான மனுதாக்கல் செய்து உயர் அதிகாரிகளிடம் கோரிக்கைகளை அளிக்க சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கீழமை நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார் கீழமை நீதிமன்றம் கவனத்தில் கொள்ளவில்லை.

3.10. விசாரணை நீதிமன்றம் மேல்முறையீட்டாளர் தரப்பு சாட்சியங்களையும் ஆவணங்களையும் நன்கு பரிசீலனை செய்யாமல் மேழெுந்த வாரியாக பார்த்து மேல்முறையீட்டாளரின் சட்டக்குழுமம் சென்னை அவர்களுக்கு கருத்துரை பெற்று அதன்படி நடத்துமாறு உத்தரவிட்டது ஒருதலை மன சாய்வுடன் செயல்பட்டதும், உத்தரவிட்ட குழுவில் உறுப்பினர் அவர்கள் சட்ட அறிவு பெற்று இருந்தும் சட்டக்குழுமத்தின் கருத்துரை கேட்கப்பட்டது மேல்முறையீட்டாளருக்கு அலைக்கழிக்கும் செயலாகும்.

3.11. ஆவணநெறி முறையை பதிவு செய்யப்படாத ஆவணமாக இருந்தாலும் தேதி மாதம் வருடம் இல்லாத காரணத்தினால் அது ஒரு மோசடி ஆவணமாகத்தான் கருதவேண்டும். முத்திரைத்தாளில் ஆவணம் வாங்கியவரின் பெயர் இல்லை. ஆவணத்தை அடிப்படையாக கொண்டு ஒரு உரிமையை பெறுவதற்கு சான்றாவணமாக தாக்கல் செய்ய முடியாது. அது பொறுப்புறுதி ஆவணம் எழுதப்பட்ட தேதியில் அந்த சொத்திற்கு அவர்தான் உரிமைதாரரா அல்லது காட்டுப்பாட்டில் வைத்திருப்பவரா என்று தெளிவுபடுத்தப்படாத ஒரு ஆவணமாகும். அவரது கட்டுப்பாட்டில்தான் இருந்தது என்பதற்கு ஆவணத்தின் தன்மையை பார்க்கும் போது தேதி, மாதம், வருடம் இல்லாததை கீழமை நீதிமன்றம் கவனிக்க தவறிவிட்டது. பொறுப்புறுதி ஆவணத்தைக் கொண்டு அவர் சொத்தில் உரிமை கோரவில்லை என்றாலும் வாங்கியவர் பெயர் இல்லாததால் அந்த ஆவணத்தை எந்த ஒரு நோக்கத்திற்காகவும் பயன்படுத்துவதற்கு இந்திய முத்திரைச் சட்டப் பிரிவு சட்டம் ஒரு தடையை ஏற்படுத்தியுள்ளது. இந்த சங்கதிகள் எல்லாம் கீழமை நீதிமன்றம் நிராகரித்து ஏற்றுக்கொள்ளாமல் வினா எழுப்பும் வகையில் சென்னைக்கு கருத்துரு கேட்டு அனுப்பியுள்ளது சட்ட விரோதமான செயலாகும். தன்னிச்சையான ஒரு அமைப்பு கருத்துரு கேட்பது சட்டம் சார்ந்த செயல்

அல்ல. கீழமை நீதிமன்றம் தன்னுடைய எல்லையின் வரம்பிற்கு உட்பட்டு செயல்படவில்லை என்பதும் தெளிவாகிறது.

3.12. 21.4.2015ம் தேதி Lr.No.EE/OM/U/Try/DM/F.CGRF/D.77/15, என்ற எண்ணில் மின்இணைப்பு கொடுப்பதற்கு மூன்று ஆவணங்களை தாக்கல் செய்து அதன் அடிப்படையில் கொடுக்கப்பட்டதாக கூறியுள்ளனர். மின் இணைப்பானது TNERC Distribution section 27(4)–ன் படி கொடுக்கப்பட்டதாகவும் தற்போது வரை மின்கட்டணம் வசூலிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரிவு 27(4)ன் படி பொருந்தாது. இருப்பிடச் சான்றிதழ் மண்டல துணை வட்டாட்சியரால் வழங்கப்பட்டது என்று கூறப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளர் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு குடி இருப்பிட சான்றிதழ் பெற்று சேதுராமன் கொடுத்ததாகவும் அதன் அடிப்படையில் மின்இணைப்பு வணிக பயன்பாட்டிற்கு கொடுத்ததாக தெரிவிக்கப்பட்டதை கவனத்தில் கொள்ளாமலும் இருப்பிட சான்றிதழின் உண்மை தன்மையை அறிந்துகொள்ளாமலும் மேல்முறையீட்டாளருக்கும் இருப்பிட சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. குறைந்தபட்ச மின்கட்டணமும் செலுத்தப்பட்டுள்ளது. வணிக பயன்பாட்டில் இல்லை என்பதும் தெரிவிக்கப்பட்டது அதை கீழமை நீதிமன்றம் கவனத்தில் கொள்ளவில்லை.

3.13. இந்திய அரசியலமைப்புச் சட்டம் 51(i) ன் கீழ் அரசு ஊழியர்கள் தங்கள் கடமையை சரியாக செய்கிறார்களா என்று கண்காணிக்க வேண்டிய பொறுப்பு மேல் அதிகாரிகளுக்கு உண்டு. அந்த கடமையை திரு. திருவேங்கடம் அவர்கள் சரியாக செய்யவில்லை என்பதை கீழமை நீதிமன்றம் கவனிக்க தவறிவிட்டது.

3.14. தமிழ்நாடு மின்சார வாரியத்தால் மின்இணைப்பு எண்.530ல் பல ஆண்டுகளுக்கு முன்பே நிரந்தர துண்டிப்பு செய்யப்பட்டுள்ளது. அந்த இணைப்பு காலம்சென்ற சீனிவாசன் பெயரில் இருந்தது. காலம் சென்ற சீனிவாசமிடமிருந்து மேல்முறையீட்டாளர் கிரையம்

பெற்றுள்ளார் என்பதை நுகர்வோர் குறைதீர் தீர்ப்பாயம் கவனத்தில் கொள்ளவில்லை. சீனிவாசனின் வாரிசு சான்றிதழை பெறாமலேயே துண்டிக்கப்பட்ட இடத்தில் சீனிவாசன் விற்றுவிட்ட பின்பு சேதுராமனுக்கு உரிமை இல்லை என்று தெரிந்து துண்டிக்கப்பட்ட இடத்தில் எந்தவித சட்டக்கருத்துருவும் பெறாமல் மின்இணைப்பு சட்ட விரோதமாக வழங்கியுள்ளதை கீழமை நீதிமன்றம் கவனத்தில் கொள்ளவில்லை.

3.15. சேதுராமன் இருப்பிடச் சான்றிதழ் தாக்கல் செய்துள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவிக்கிறார். மேல்முறையீட்டாளர் இருப்பிடச் சான்றிதழ் வட்டாச்சியரால் வழங்கப்பட்டதை தாக்கல் செய்கிறார். ஆதார் அடையாள அட்டை இருப்பிட சான்று ஆகாது. மேலும் வேறு குடும்ப அட்டை பக்கத்தில் வேறு ஒரு முகவரியில் வைத்துள்ளார். வாக்காளர் அடையாள அட்டையும் வேறு ஒரு முகவரியில் வைத்துள்ளார். இது வழக்கிற்காக உருவாக்கப்பட்ட ஒன்றாகும். இருப்பிடத்தினை நிரூபிக்கக்கூடிய ஒன்று அல்ல. தனிமனித அடையாளம் தான் ஆதார் அடையாள அட்டை ஆகும். உச்சநீதிமன்றமே ஆதார் அடையாள அட்டையினை கட்டாயப்படுத்தவில்லை என்பதை தெளிவாக்குகிறோம்.

3.16. TNERC Distribution Code section 27(4)ன் படி பொறுப்புறுதி ஆவணம் வாங்கப்படவில்லை. எனவே சட்டப்படி செல்லத்தக் பொறுப்புறுதி ஆவணம் இல்லை. ஒழுங்குமுறை விதி தொகுப்பு படிவம் 6ன் படி காப்புறுதிப்பத்திரம் /உறுதியேற்பு பத்திரம் இல்லை. சாட்சிகளின் முழுமையான முகவரி இல்லை. காப்புறுதி/உறுதியேற்பு பத்திரம் இல்லாமல் மின்இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளதாகவே கருத வேண்டும் என்பதை கீழமை நீதிமன்றம் கருத்தில் கொள்ளவில்லை. TNERC Distribution Code section 27(4)ல் உள்ள படிவம் வழங்கப்படவில்லை.

3.17. மின்சார வாரியத்தை எந்த உரிமையியல் வழக்கிலும் தங்களை தரப்பினராக சேர்க்கவில்லை என்று கூறுவது தங்கள் கடமைமீறி செயலை மறைப்பதற்காக கூறப்பட்டதை குறைதீர்க்கும் மன்றம் கவனத்தில் கொள்ளவில்லை. மின்இணைப்பு கொடுத்த தேதியில் எஸ். சேதுராமன் பெயரில் எந்தவிதமான உரிமையியல் வழக்கும் மேல்முறையீட்டாளருக்கும் சேதுராமனுக்கும் இல்லை என்று தெரிவித்ததை மன்றம் கவனத்தில் கொள்ளவில்லை. திருச்சி மாவட்ட 2வது உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.921/2014–ல் இடை மனு எண்.445/2014–ல் எஸ். சேதுராமன் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பெறப்பட்டுள்ளது அதை கீழமை நீதிமன்றம் கவனத்தில் கொள்ளவில்லை.

3.18. மேலும் கடுமையான மின் தட்டுப்பாடு உள்ள நிலையில் வீடு பூட்டப்பட்டிருக்கும் நிலையில் மின் இணைப்பு கொடுத்திருப்பது தொடர்ந்து மின்கட்டணம் செலுத்தப்பட்டு வருவது மின் திருட்டுக்கு ஒப்பாகும். நேர்மையற்ற மின்பயன்பாட்டை தடுப்பதற்கு தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித்தொகுப்பு அத்தியாயம் iv விதி 23 சட்டத்தின் 135 முதல் 142 வரையிலான சட்டப்பிரிவுகளில் கூறப்படுகிறது.

4. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள்:</u>

**4.1.** திருச்சி பெருநகர வட்டம், நகரியம் கோட்டம்,செந்தண்ணீர்புரம் பிரிவிற்குப்பட்ட கீழப்புதூர் 6வது தெரு, கதவு எண்.45/1, என்ற முகவரியில் திரு. எஸ். சேதுராமன், என்பவர் பெயரில் வழங்கப்பட்ட மின்இணைப்பினை துண்டிக்கக்கோரி திருமதி. ஜி. கலைச்செல்வி என்பவர் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் அளித்த மேல்முறையீட்டு மனு விசாரணை செய்யப்பட்டு மின்வாரிய சட்ட மையத்தில் (Legal Cell) கருத்துரை பெற்று மேல்நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டிருந்தது.

4.2. அதனை தொடர்ந்து மின்வாரிய சட்ட மையத்தின் கருத்துருவினைப் பெறும் நடவடிக்கையில் அதற்கு முன்பாக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மின்வாரிய வழக்கறிஞரிடம் (Board Standing Counsel) கோப்பு அனுப்பிவைக்கப்பட்டு அவரது கருத்து கேட்கப்பட்டது.

4.3. திருமதி. ஜி. கலைச்செல்வி அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்கள் மற்றும் திரு. எஸ். சேதுராமன் அவர்களால் மின்இணைப்பு பெற சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை ஆய்வு செய்த அரசு வழக்கறிஞர், மின்இணைப்பு பெற மனுதாரர் திரு. எஸ். சேதுராமன் தகுதியுடையவராகிறார் என்ற அடிப்படையில் மின்இணைப்பு அவரது பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். அப்போது சொத்து தொடர்பாக நடைபெற்ற பிற நிகழ்வுகள் மின்வாரியத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை என்பதையும் அதன் பிறகு மின் வாரியத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட ஆவணங்களின்படியும் மின்இணைப்பு வழங்கப்பட்டுள்ள சொத்தானது திரு. எஸ். சேதுராமன் அவர்களுக்கே உரிமையானது என்றும் அவ்விடத்தில் உதவி பொறியாளர்/இயக்குதலும் காத்தலும்/செந்தண்ணீர்புரம் அவர்கள் திரு. எஸ். சேதுராமன் பெயரில் மின்இணைப்பு வழங்கியது சட்டத்திற்கு புறம்பானது என்று திருமதி. ஜி. கலைச்செல்வி அவர்கள் முன்வைக்கும் வாதம் ஏற்புடையதல்ல என்றும் தெரிவித்துள்ளார்.

4.4. அதனைத் தொடர்ந்து மின்வாரிய சட்டமையத்தின் கருத்துரையிலும் அரசு வழக்கறிஞர் கருத்துக்களையே முன்னிறுத்தி மின்இணைப்பு வழங்கப்பட்ட சொத்து குறித்து நீதிமன்றம் தான் முடிவெடுக்க இயலும் என்றும் மின்இணைப்பு வழங்குவது என்பது மின்வாரியத்தின் பணியாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மின்இணைப்பு வழங்கப்பட்ட சொத்தானது திரு. எஸ். சேதுராமன் அவர்களது கட்டுப்பாட்டில் உள்ள நிலையில் மின்இணைப்பினைத் துண்டிக்க நீதிமன்ற உத்தரவு ஏதுமின்றி திரு. எஸ்.

சேதுராமன் பெயரில் கதவு எண்.45/1 கீழபுத்தூர், 6வது தெரு, பாலக்கரை என்று முகவரியில் வழங்கப்பட்ட மின்இணைப்பு எண்.209–149–1411 துண்டிக்க இயலவில்லை என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

5. <u>மின்குறை தீர்ப்பாளரின் கேட்புரை :</u>

5.1. மேல்முறையீட்டாளரும் மற்றும் எதிர் மனுதாரர்கள் தங்களின் வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக மின்குறைதீர்ப்பாளர் முன்பாக 2.9.2015ல் நடைபெறும் என்று இருதரப்பினருக்கும் தெரிவிக்கப்பட்டது. 2.9.2015ல் அகில இந்திய தொழிற்சங்கத்தின் வேலை நிறுத்தம் இருப்பதால் கேட்புரையை தள்ளிவைக்கும்படி எதிர்மனுதாரர் கோரியதால் கேட்புரை தள்ளிவைக்கப்பட்டு 6.10.2015 அன்று நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

5.2. 6.10.2015 அன்று எதிர்மனுதாரர்கள் மூன்று பேரும் ஆஜராகி இருந்தார்கள். ஆனால், மேல்முறையீட்டாளரின் சார்பில் யாரும் ஆஜராகவில்லை. எனவே, வழக்கு விசாரணை 5.11.2015 அன்று நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. மின்இணைப்பு பெற்றுள்ள திரு. எம்.எஸ். சேதுராமன் அவர்கள் தன்னையும் மேற்கண்ட விசாரணைக்கு அழைக்க வேண்டும் என்று மனு செய்திருந்தார். எனவே, அவரையும் அந்த கேட்புரையில் கலந்து கொள்ளும்படி தகவல் தெரிவிக்கப்பட்டது.

5.3. 5.11.2015 அன்று நடந்த கேட்புரையில் திரு. என். கணேசன், உதவி பொறியாளர்/செந்தண்ணீர்புரம் எதிர்மனுதாரர்–3 எதிர்மனுதாரர்களின் சார்பில் கலந்து கொண்டார்.

5.4. மேல்முறையீட்டாளர் சார்பில் திரு. ஜெயபிரகாஷ் வழக்கறிஞர் அவர்கள் கலந்து கொண்டார்.

5.5. திரு. M.S. சேதுராமன் அவர்களும் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

5.6. மேல்முறையீட்டாளர் திரு. எஸ்.கே. திருவேங்கடம், முன்னாள் உதவி பொறியாளர்/செந்தண்ணீர்புரம் அவர்களையும் விசாரணை செய்ய வேண்டும் என்று கோரியதால் அவரையும் 6.1.2016 அன்று நடந்த கேட்புரையில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. அவரும் 6.1.2016 அன்று நடந்த கேட்புரையில் கலந்து கொண்டு தன்னுடைய வாதங்களை தெரிவித்தார்.

6. **<u>மேல்முறையீட்டாளரின் பிரதிநிதி கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்:</u>**

6.1. மேல்முறையீட்டாளர் சார்பில் திரு. ஜெயபிரகாஷ், வழக்கறிஞர் அவர்கள் 5.11.2015 அன்று கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார். அவர் தன்னுடைய மேல்முறையீட்டு மனுவிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

6.2. வழக்கறிஞர் அவர்கள் மேல்முறையீட்டாளரின் 2.9.2015 அன்று சமர்ப்பித்துள்ள எழுத்துபூர்வமான வாதுரையில் உள்ள வாதங்களையும் வலியுறுத்தினார்.

6.3. வழக்கறிஞர் அவர்கள் திருமதி. கலைச்செல்வி அவர்கள் தான் சொத்தின் உரிமையாளர் என்றும் மின்இணைப்பு பெற்றுள்ள திரு. சேதுராமன் அந்த வீட்டில் குடியிருக்கவில்லை என்றும், கலைச்செல்வி அவர்களிடம் தான் மேற்கண்ட வீடு உள்ளது என்றும் வாதிட்டார். எனவே, மின்இணைப்பை ஒரு அத்துமீறி நுழைந்தவர்க்கு கொடுத்துள்ளது தவறு என்று வாதிட்டார்.

6.4. மேலும், துணை வட்டாட்சியரிடமிருந்து திருமதி. கலைச்செல்வி அவர்களும் இருப்பிட சான்றிதழ் (residence certicate) பெற்று இணைத்துள்ளார்கள் என்பதால் அந்த இடம் அவரின் வசம்தான் உள்ளது என்றும் வாதிட்டார்.

6.5. மேலும், Indemnity Bond–ல் தேதி குறிப்பிடப்படவில்லை முத்திரைத்தாள் திரு. சேதுராமன் பெயரில் வாங்கப்படவில்லை, எனவே, அந்த பொறுப்புறுதி ஆவணம் சட்டப்படி செல்லுபடியாகும் ஆவணம் அல்ல. மேலும், அதில் சேதுராமன் அவர்களே அவரின் உரிமை உடைய வீட்டிற்கு குடியிருப்பவர் என்று கூறப்பட்டுள்ளதும் உரிமையாளரின் சம்மதக்கடிதம் பெற முடியவில்லை என்று பொறுப்புறுதி ஆவணத்தில் கூறுவதும் முரணாக உள்ளது என்றும் தெரிவித்து எனவே அந்த ஆவணம் ஏற்புடையது அல்ல என்றும் வாதிட்டுள்ளார்.

6.6. மேலும், அன்று சமர்ப்பித்த எழுத்துப்பூர்வமான வாதுரையில் கீழ்கண்ட வாதங்களை தெரிவித்துள்ளார்.

(i) திரு. ஆர். கிருஷ்ணன், வழக்கறிஞருக்கு 1.8.2015–ல் கருத்துரைக்கு சமர்ப்பித்துள்ளனர். 30.7.2015–ல் அதிவேக செயல்பாட்டின் காரணமாக சேதுராமன் தாக்கல் செய்த 1) Residence Certificate, 2) adhaar Card, 3) Deed of Indemnity இவற்றை எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்யாமல் மூத்த வழக்கறிஞர் அதை கேட்டுப்பெறாமலும் இந்த வழக்கிற்கு மின் குறைதீர்ப்பு மன்றம் தன்னிடம் கருத்துரை கேட்க கோரவில்லை என்பதை அந்த உத்தரவிலிருந்து புரிந்து கொள்ளாமல் எதிர்மனுதாரரின் வழக்கறிஞர்களாக இருந்து வழக்கின் தன்மையை புரிந்து கொள்ளாமல் கருத்துரை கொடுத்தது மனசாய்வுடன் எதிர்மனுதாரர்களின் வழக்கறிஞர்கள் என்பதை தெளிவுபடுத்துவதற்காக அவர்களின் கருத்துரை பிரதிபலன் பெற்றுக்கொண்டு கொடுத்துள்ளதாக அமைந்துள்ளது. சேதுராமன் தாக்கல் செய்த 1) Residence Certificate, 2) adhaar Card, 3) Deed of Indemnity கருத்துரையில் இரு வழக்கறிஞர்களும் இந்த ஆவணத்தைப் பற்றி கருத்து தெரிவிக்கவில்லை. மின் இணைப்பு கொடுத்தற்கு இந்த மூன்று ஆவணங்களை மட்டுமே மின்குறைதீர்ப்பாளர் மன்றத்தில் எதிர்மனுதாரர்களால்

சமர்பிக்கப்பட்டுள்ளது என்பதை புரிந்துகொள்ளவே இல்லை. Deed of Indemnity ஆவணத்தை கருத்துரை பெற்ற இரு வழக்கறிஞர்களிடமும் சமப்பிக்கவில்லை என்பது அவர்கள் கருத்திலிருந்தே தெளிவாகிறது. எனவே, எதிர்மனுதாரர்கள் சட்டப்படி மின் இணைப்பு தரவில்லை. அத்துமீறி நுழைந்த நில அபகரிப்பாளருக்கு அதிகார துஷ்பிரயோகத்தை பயன்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளது.

(ii) மின்குறைதீர்ப்பாளர் மன்றம் தன்னுடைய உத்தரவில் திருமதி. கலைச்செல்வி அவர்களின் முறையீட்டு மனுவில் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களை பரிசீலனை செய்து சட்டக்குழுமம் சென்னை அவர்களது கருத்துரு பெற்று அதன்படி நடக்குமாறு உத்தரவிடப்படுகிறது என்று தெரிவித்திருந்தது.

(iii) அதை எதிர்த்துதான் மேல்முறையீட்டாளர் மேல்முறையீடு தாக்கல் செய்தார். உரிமம் பெற்றவரிடமே மன்றம் கருத்துரு கேட்பது மனுதாரருக்கு பாதிப்பு ஏற்படும் என்பதாலும் தன்னுடைய நீதிமன்ற வரம்பை மாண்பை குலைக்கும் வகையில் உத்தரவு இருந்ததால்தான் மேல்முறையீட்டாளரால் மேல்முறையீடு செய்யப்பட்டது. சட்ட வல்லுனர்கள் அடங்கிய குழுமத்தின் தலைவர் சுதந்திரமாகவும் தன்னிச்சையாகவும் முடிவு எடுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டு உத்தரவிட வேண்டியவர் எதிர்மனுதாரரிடமே பொறுப்பை ஒப்படைப்பது மன்றத்தின் மாண்பை குலைக்கும் செயலாகும்.

(iv) திரு சேதுராமன் இடத்தின் சொந்தக்காரரோ இடத்தை சட்டப்படி கட்டுப்பாட்டில் வைத்திருப்பவரோ அல்ல. முதல் தகவல் அறிக்கைப்படி அவர் அந்த இடத்தில் அத்துமீறி நுழைந்தவர் ஆவார். போலி ஆவணங்கள் வழியாக உதவி மின் பொறியாளர் திரு. திருவேங்கடத்தின் துணையுடன் அத்துமீறி நுழைந்து சொத்தை அபகரிக்க நினைக்கும் ஒரு அபகரிப்பாளர் ஆவார். மேல்முறையீட்டாளருக்கு ஏற்பட்ட இழப்பீடுக்கு தனி வழக்கு

தொடர வேண்டிய நிலைக்கு கருத்துரு என்ற பெயரில் திருவேங்கடத்தை காப்பாற்ற எதிர்மனுதாரர்கள் செயல்பட்டுள்ளனர்.

(v) மாண்புமிகு மின் குறைதீர்ப்பாளர் முடிவு எடுத்து அறிவிக்க வேண்டிய நேரத்தில் கீழமை நீதிமன்றத்தில் வழக்கில் இல்லாத எம்.எஸ். சேதுராமன் அவர்களை 24.10.2015 நாளிட்ட மனுவில் அவருடைய வாதத்தை எடுத்துரைக்க அனுமதிக்க வேண்டி கேட்டதன் பேரில் எம்.எஸ். சேதுராமன் அவர்களை மேல்முறையீட்டாளருக்கு எந்தவித அறிவிப்பும் செய்யாமல் இயற்கை நீதிக்கு புறம்பாக அவரை இந்த வழக்கில் சேர்த்து கொண்டதை நீக்கம் செய்ய வேண்டும் என்று மேல்முறையீட்டாளர் பிரார்த்திக்கிறார்.

7. <u>எதிர் மனுதாரர்கள் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்:</u>

7.1. எதிர்மனுதாரர் சார்பில் ஆஜரான எதிர்மனுதாரர்–3 திரு. என். கணேசன், உதவி பொறியாளர் / செந்தண்ணீர்புரம் அவர்கள் எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

7.2. திரு. என். கணேசன் உதவி பொறியாளர்/செந்தண்ணீர்புரம் அவர்கள் திரு. சேதுராமன் அவர்களுக்கு மேற்கண்ட மின்இணைப்பு அவர் அந்த வீட்டின் குடியுரிமை சான்று மற்றும் பிணையுறுதி பத்திரம் அளித்து விண்ணப்பம் அளித்ததின் பேரில் கொடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

7.3. மேலும், மேற்கண்ட சொத்தில் உரிமைக்காக நீதிமன்றத்தில் வழக்கு நடைபெறுவதால் அந்த வழக்கில் நீதிமன்றத்தின் உத்தரவிற்கு இணங்க மின்இணைப்பை பெயர் மாற்றம் செய்யவோ அல்லது துண்டிக்கவோ முடியும் என்றும் வாதிட்டார்.

7.4. மேலும், சட்ட ஆலோசகர், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் அவர்கள் தன்னுடைய 12.8.2015 நாளிட்ட கருத்துருவில் standing counsel அவர்களுடைய 30.7.2015 நாளிட்ட கருத்தை ஏற்றுக்கொள்வதாக தெரிவித்து திரு. சேதுராமன் பெயரில்

கொடுக்கப்பட்டுள்ள மின்இணைப்பை தற்பொழுது துண்டிக்க வேண்டாம் என்றும் தகுதிவாய்ந்த நீதிமன்றம் மின்இணைப்பை துண்டிக்க உத்தரவிட்டால் அப்பொழுது மின்துண்டிப்பு செய்யலாம் என்றும் தெரிவித்துள்ளார் என்பதை சுட்டிக்காட்டி உரிமை பற்றிய வழக்கின் தீர்விற்கு பின்பு மின்துண்டிப்பை பற்றி முடிவு செய்யலாம் என்று வாதிட்டார். மேலும், மின்கட்டணம் மேற்கண்ட மின் இணைப்பிற்கு சரியாக கட்டப்படுவதால் மின்துண்டிப்பு செய்ய விதிகளில் வழி இல்லை என்றும் வாதிட்டார்.

## 8. திரு. சேதுராமன் அவர்கள் கேட்புரையின்பொழுது எடுத்துரைத்த வாதங்கள்

8.1. இந்த வழக்கிலுள்ள வாளகத்திற்கு மின்இணைப்பு பெற்றுள்ள திரு. எம்.எஸ். சேதுராமன் அவர்கள் தன்னையும் விசாரிக்க வேண்டும் என்று அவருடைய 24.10.2015 நாளிட்ட மனுவில் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவரையும் 5.11.2015ல் நடந்த கேட்புரையில் கலந்து கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.

8.2. திரு. எம்.எஸ். சேதுராமன் அவர்கள் அந்த சொத்து அவருக்கு திருமதி. முத்துலெட்சுமி அம்மாள் எழுதிவைத்த 3.6.85 நாளிட்ட உயில் சாசனத்தின்படி அவருக்கு சொந்தமாகும் என்றும், எனவே, அதன் பிறகு 1988—ன் உள்ள விற்பனையின்படி திருமதி. கலைச்செல்வி அவர்களுக்கு உரிமை என்பது தவறு என்றும் வாதிட்டார்.

8.3. மேலும், மேற்கண்ட சொத்தின் உரிமை பற்றி உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவையில் உள்ளன என்றும் வாதிட்டார்.

8.4. திரு. சேதுராமன் அவர்கள் அவர் அந்த இடத்தில்தான் வசிக்கின்றார் என்றும், அந்த இடத்தில் ஏற்கனவே இருந்த துண்டிக்கப்பட்டுள்ள மின்இணைப்பு எண்.530லிருந்த நிலுவைத்தொகையைம் அவர்தான் மின்வாரித்திற்கு செலுத்தியதாகவும் தெரிவித்தார்.

8.5. அந்த மின்இணைப்பு வழங்குவதற்கு முன்பு வளாகம் மின் வாரிய அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு தகுந்த ஆவணங்களை பெற்று கொண்டுதான் மின்இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதையும் சுட்டிக்காட்டினார்.

8.6. மேற்கண்ட மின்இணைப்பை அவர் பயன்படுத்தி வருவதாலும் மின்துண்டிப்பு செய்தால் அவரின் அடிப்படை உரிமையான மின்சாரம் பெறுவது பாதிக்கப்படும் என்பதையும் தெரிவித்து மின்இணைப்பை துண்டிக்க வேண்டாம் என்றும் மேலும், அவர்சரியாக மின்கட்டணத்தை செலுத்தி வருவதாலும் மினதுண்டிப்பு செய்வது மின்சார சட்டத்திற்கு புறம்பானது என்றும் வாதிடுள்ளார்.

8.7. மேலும், அவருடைய 30.11.2015 நாளிட்ட எழுத்துபூர்வமான வாதுரை மற்றும் பதிலுரையும் சமர்ப்பித்துள்ளார். அதிலுள்ள வாதங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(i) The Electricity Board officials had inspected the site. They had satisfied themselves with the Genuineness of the documents along with the wiring work done in that building and then this electric connection. was given. A mere existence of a criminal case will not prove her possession. This appellant herself accepts the defendants 1 to 3 had inspected the site and she even alleged them of breaking the lock in the suit property along with this defendant. A case in Crl.O.P.(MD) No: 7717/14. was filed by this appellant on the same ground. It was dismissed by the Hon'able Justice of the Madurai bench of Madras high court.

(ii) The existence of the criminal case in No 929/12 dt 4/10/12 will not prove the occurrence of crime. This Defendant has contested this case in the court and

this case is pending in the court. Equally a counter case in crime no 930/12 dt 1/10/12 is pending in the same Magistrate court on this appellant and her husband on the complaint given by this defendant. These cases have nothing to do with this case.

(iii) As a safe guard measure the Electricity Board officials usually obtained an indemnity bond from consumers and its not a strange one. This defendant accepts of executing an indemnity bond hence it cannot be said as a false one.This defendant is well marked in it as the owner. Any clerical error or technical error found in it can be corrected anytime and it cannot be held as a grave fault and its concerns only between the defendants so the consumer redressal forum was correct in ignoring this appellant's fact.

(iv) The contention of the appellant that earlier power supply No: 530 existed in the name of Srinivasakonar and the appellant has purchased from him and it's not taken into account by the consumer redressal forum has no merits in it as-(a) Even if her document is assumed true. The appellant's tittle sale deed doesn't contain the said earlier service number in it as a part and parcel of the sale proceeding hence she cannot claim on it.

(v) as a court order in O.S.No: 85/2008 by FTC supersedes the appellants document from 6/4/2010 itself and this defendant has been allotted 1/3 share in the suit property then appellant document is invalid without this defendant's attestation along with other legal heirs in lien to Hindu succession act 1956 ..

where in also this defendant's title is well marked. The S.C.No: 530 was disconnected in 2006 itself on non payment of dues. Its bounded by the limitations this appellant cannot claim on it.

(vi) The original owner of the suit property who holds the possession has been given a connection. It is absurd to accuse him as land grabber. and the defendant's 1 to 3 of helping him there by misusing power invested with them. the consumer redressal forum is correct in dismissing this allegation.

(vii) The appellants effort to dislodge possession from this defendant with a stay order in I.A NO:445/14 in O.S.NO:921/14 had been blocked by this defendant obtaining a stay order in I.A 565/15 of CMA No 6/15 and this defendant is in possession of the suit property at all times.

(viii) The appellant has asked for the disconnection of the electric service No. 06-209-149-1411 in my name it cannot be ordered against law. This electric service was given after a through scrutiny with' site inspections by the concern officials. This connection was given on 11-10-13. At that time no one including this appellant had objected.

(ix) The appellants statements, accepts the site inspection made by defendants, 1 to 3 She accuse them of 'collaborating with the 4th defendant. breaking the lock of the building on the pretext of inspection and giving electric connection which is abuse of power etc' ... this accusation also proves that this appellant is not a resident to the suit property.

(A) (Her claims under documents marked 3 to 7, 9, 11 to 14 are false, fabricated recently. In her petition's dated 25/10/2013 to the Chief Ministers special cell & Assistant commissioner of police, Trichy, she accepts of having deposited the keys of the suit property after 1/10/12, incident, as per the instruction of the then inspector of police palakarai. (ref. Document marked D.W.1). After accepting the deposit of keys in the police station she cannot claim of living in it? so all these documents are false and fabricated. She further accuses this defendant of breaking the lock a day before thereby she confirms this defendants presence in the suit property. Like vise all her allegations are contradictory.

(B) Earlier a writ petition in the High court bench was filed by her accusing the police of colliding with this defendant by handing the keys she had deposited with the police inspector of palakarai after the 1/10/12 incident. The Honorable Justice of Madurai Bench of Madras high court was pleased to dismiss appellant case/ allegations in Crl.O.P.(MD) NO:7717/14 on the grounds mistake of facts' proving she lies. She is not in possession of the suit property.

(x) This defendant is the eldest son of Srinivasakonar his rights on the suit property is well marked. This defendant holdings in this joint family property's values smaller,when compared to the property's held by the other co- partner's, so during partition the properties held by him becomes his absolute. This appellant has no right and cannot question this real owner.

(xi) This appellant does not hold a valid tittle. Her purchase document NO:8632 dated 30/12/2010. doesn't bear the attestation of the legal heirs in accordance to FTC is order in O.S.No: 85 /08. After the 2005 amendment of the Hindu Succession act. Srinivasa konar on his own is not entitled to execute a sale deed in this joint Hindu family's property's. This appellant cannot claim the suit property with this false &invalid document.

(xii) The appellants side document No 2433/88 is executed by Jayarama konar and others claiming tittle and possession .when jayaramakonar had settled his property's to Muthulakshmi ammal vivid document No:2305/1965. Then again! he cannot claim tittle on the suit property in the 1988 and execute a sale deed to Srinivasakonar with others ,who doesn't hold any tittle nor possession at that time. Muthulakshmi was alive at that time. She did not execute any document in their favor. Its an invalid document executed by persons without tittle. Consequently the appellants purchase document said to be executed by Srinivasa konar is invalid. as he doesn't hold any tittle to the property.

(xiii) Muthulakshmi being the real owner, gave all the property's belonging to her, through her will dated 3/6/1985, to Sethuraman. The will came to force after her death on 2/12/90 then onwards this defendant is the absolute owner of the suit properties).

(xiv) The legal opinion given by Advocate S.M.S Johnnybasha on 30.07.2015 do states that the appellants documents are not valid, having compared with this defendants documents. It advises the EB not to disconnect this connection. R.Krishnan BABL ,opinion

on 12.08.15 states that this electricity connection cannot be disconnected according to law. This appellant cannot ask for disconnecting this defendants service connection with these invalid false document.

(xv) The appellant cannot state there are no civil court cases pending between herself and the 4th defendant at the time of giving electric connection. she accepts the presence of civil court cases in her statement recorded at the police station during withdrawal of her petition's on 18/11/13 (ref D.W 1 document) The O.S.85/2008 case in FTC is binding on her for the suit property and her said vendor Srinivasakonar is a part and party to this case. The appellant had even file a transfer petition TROP.56/14 to her suit in O.S.No:921/14. to this suit in 85/08. It was dismissed by the Honorable District judge Trichy. after due consideration.

## 9. திரு. திருவேங்கடம் முன்னாள் உதவி பொறியாளர், செந்தண்ணீர்புரம் அவர்களின் எழுத்துபூர்வமான வாதுரை

9.1. திரு. திருவேங்கடம் முன்னாள் உதவி பொறியாளர், செந்தண்ணீர்புரம் அவர்கள்தான் மேற்கண்ட மின்இணைப்பு வழங்கும் பொழுது இருந்த அலுவலர் என்பதால் அவரையும் விசாரிக்க வேண்டும் என்ற மேல்முறையீட்டாளரின் வேண்டுகோளுக்கு இணங்க திரு. திருவேங்கடம் அவர்களையும் **6.1.2016** அன்று நடைபெற்ற கேட்புரையின்பொழுது கலந்து கொள்ள வேண்டும் என்று அறிவிப்பு வழங்கப்பட்டது

**9.2.** **6.1.2016**ல் முன்னாள் உதவி பொறியாளர் திருவேங்கடம் அவர்கள் (தற்பொழுது உதவி செயற்பொறியாளர், மணச்சலூர்) கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

**9.3.** திரு. திருவேங்கடம் அவர்கள் தான் அந்த இடத்தை பார்வையிட்டு அங்கு திரு. சேதுராமன் அவர்கள் குடியிருப்பதை உறுதிபடுத்திய பின்புதான் ஒரு மின் இணைப்பை வழங்க தேவையான ஆவணங்களை பெற்று மின்இணைப்பை வழங்கியதாக தெரிவித்தார்.

**9.4.** மேலும், மேற்கண்ட மின்இணைப்பை வழங்கும்பொழுதோ அல்லது அந்த இடத்தை ஆய்வு செய்யும்பொழுதோ மேல்முறையீட்டாளர் எந்தவித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை என்று வாதிட்டார். தன்னுடைய எழுத்துபூர்வமான **11.1.2016** நாளிட்ட வாதுரையில் கீழ்கண்டவாறு தெரிவித்தார்.

(i) The property in Door *No.45/1,* 6th Street, Keelaputhur, Palakkarai in *T.S.No.40/1A,* Sengulam Village, Trichirappalli was claimed to be in the custody *I* ownership *I* possesion of Mr.Sethuraman and he sought for effecting new service connection after paying the permanent disconnection arrears of service connection nO.530 which was disconnected from the above property by 2005. The service connection no.530 stood in the name Thiru.Srinivasan father of Thiru.Sethuraman.

(ii) He was directed to furnish the requiste application with necessary documents.

(iii) I personnely inspected the property and I found that Thiru.Sethurarnan was in absolute possession enjoyment of the same.

(iv) Alongwith the application the applicant submitted the following documents.

1. Settlement Deed in the name of Tmt. Muthulakshmi.
2. Will executed by Tmt.Muthulakshmi.
3. Death certificate of Tmt.Muthulakshmi Ammal.
4. Residential certificate issued by the Zonal Deputy Tahsildar.
5. Aadhaar Card.
6. Decree in *O.S.No.85/2008.*
7. Indemnity Bond

(v) On verification of the above documents, I was satified that *1/3rd* of the property belongs to Thiru.M.S.Sethuraman. As such he has title to the property besides possession and hence I effected the service connection on 11.10.2013 after receiving necessary charge.

(vi) Claiming to be owner of the property One Tmt.Kalaiselvi has objected tothe effected service connection only after 25 days and produced certain documents.

(vii) I had given a reply and the Executive Engmeer / O & M / Urban / Trichy had also given a reply to Tmt.Kalaiselvi refuting the Charges.

(viii) The discription of the applicant in the indemnity bond filled by the applicant and enclosed with the application, bothas occupier as well as title holder is not wrong since he occupies it and the decree of the court catagarize that he is the owner of *1/3rd* portion. There has been no appeal against that decree at the time of effecting the service connection.

**10. <u>மேல்முறையீட்டாளரின் 4.1.2016 நாளிட்ட மனுவில் உள்ள வாதங்கள்</u>**

**10.1** மேல்முறையீட்டாளர் **6.1.2016** அன்று நடைபெற்ற கேட்புரையில் கலந்துகொள்ளவில்லை. ஆனால், மேல்முறையீட்டாளரின் வாதத்தை தன்னுடைய **4.1.2016** நாளிட்ட மனுவில் தெரிவித்துள்ளார். அவர் கூறியுள்ள வாதங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**(i)** **1** முதல் **3** வரையுள்ள எதிர்மனுதாரர்கள் மின் இணைப்பு Occupier என்ற அடிப்படையில் கொடுத்ததாக கூறி மூன்று ஆவணங்களை மட்டும் திருச்சிராப்பள்ளி நுகர்வோர் குறைதீர்க்கும்

மன்றத்தில் அதாவது 1. Residence Certificate 2. Adhar card, 3. Deed of Indemnity Bond குறியீடு செய்யப்பட்டது. மேல்முறையீட்டாளர் தான் கிரையம் பெற்ற கிரைய சாசன பத்திரத்தை மற்றும் வீட்டு வரி செலுத்திய வரி ரசீது, இருப்பிட சான்றிதழ் கேஸ் இணைப்பு வங்கி கணக்கு தொலைபேசி இணைப்பு சேதுராமன் மீது போடப்பட்ட FIR ஆகியவற்றை தாக்கல் செய்யப்பட்டது. சேதுராமன் மீது அத்துமீறி உள்ளே நுழைந்தவர் என்று முதல் தகவலறிக்கை பதியப்பட்டு வழக்கு நிலுவையில் குற்றவாளியாக காவல் துறையால் குற்றம்சாட்டபட்ட ஒருவர் இடத்தில் அத்துமீறி உள்ளே நுழைந்தவர். குற்றம் சாட்டப்பட்டவர் ஒருவரின் மனுவை வாங்கி முறையற்ற சட்டவிரோதமான போலியான Deed of Indemnity Bond–ஐ அவரிடமிருந்து பெற்று தன்னுடைய பதவியின் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து மின்இணைப்பு கொடுத்த திரு.திருவேங்கடம் மின்பொறியாளர் உள்நோக்கத்துடன் செயல்பட்டுள்ளார். மின்இணைப்பு கொடுப்பதற்கு முன்னாலே அதில் பழைய இணைப்பு துண்டிக்கப்பட்டு இருந்தது. 4.10.2012–ல் சேதுராமன் மீது முதல் தகவலறிக்கை தாக்கல் செய்யப்பட்டு அவர் பிணையத்தில் உள்ள நிலையில்தான் மின்இணைப்பு திரு.திருவேங்கடத்தால் போலி ஆவணங்களின் அடிப்படையில் கொடுக்கப்பட்டுள்ளது.

(ii) தற்போது இந்த வழக்கில் சேதுராமன் ஒரு எதிர்மனுதாரராக சேர்ப்பது சட்ட விரோதமானது ஆகும்.

(iii) ஏற்கனவே மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் எடுத்த முடிவு சட்டத்தின்பால் இல்லாமல் இருப்பதால் எதிர்மனுதாரரை வாரிய வழக்கறிஞர் கருத்துரை பெற உத்தரவிட்டதால் அதை எதிர்த்து தான் மேல்முறையீடு செய்யப்பட்டது. சுயமாக முடிவெடுக்க வேண்டிய ஒரு அதிகார அமைப்பு முடிவெடுக்காமல் எதிர்மனுதாரருக்கு சாதகமாக நடந்துகொண்டு 30நாட்களுக்குள் எதிர்மனுதாரர் எந்த கருத்துரையும் பெறவில்லை என்பதை இந்த மேலாண்மை பொருந்திய மின் குறைதீர்ப்பாளர் மன்றத்திற்கு கொண்டு வருகிறோம். எதிர்மனுதாரர்களோ கருத்துரை

கொடுத்தவர்களோ சேதுராமன் தாக்கல் செய்த Deed of Indemnity Bond–ஐ பற்றி எந்தவித கருத்தையும் தெரிவிக்கவில்லை.

(iv) மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்ட பின்பு பல மாதங்கள் கழித்து ஒருதலைபட்சமாக கருத்துரு பெற்று தங்களிடம் சமர்ப்பித்துள்ளார். நீதிமன்றங்கள் நீதிமன்றங்களாத்தான் செயல்பட வேண்டும். செயல்படாத மின்குறைதீர்ப்பு மன்றம் திருச்சிராப்பள்ளி அவர்களுக்கு அறிவுறுத்தும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

(v) எதிர்மனுதாரர்கள் உரிமையியல் வழக்கை தற்போது சித்தரிக்க முயற்சி செய்கின்றனர். இணைப்பு துண்டிக்கப்பட்ட இடத்தில் இணைப்பானது மூன்று ஆவணத்தின் அடிப்படையில் கொடுக்கப்பட்டது அத்துமீறி நுழைந்தவரை occupier என்று முடிவு செய்தது மிகவும் தவறான முடிவாகும்.

(vi) மேல்முறையீட்டாளர் வழக்கறிஞருக்கு விரைவு அஞ்சல் வழியாக அனுப்பிய எதிருரையில் திரு.சேதுராமன் கையொப்பமிடவில்லை. கையொப்பமிடாத எதிருரையை எங்களுக்கு அனுப்பியுள்ளார். நீதிமன்றம் இதை கவனத்தில் கொள்ளவேண்டும்.

(vii) மின்பொறியாளர் திரு. திருவேங்கடத்தின் மீது அத்துமீறி நுழைந்த சேதுராமனுக்கு மின்இணைப்பு கொடுத்து தன் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்த அவர் மீது துறை ரீதியாக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும்படியும் அத்துமீறி நுழைந்த ஒருவருக்கு கொடுக்கப்பட்ட மின்இணைப்பை துண்டிக்கும்படியும் பிரார்த்திக்கின்றோம்.

மேலும் ,மேற்கண்ட வாதுரையுடன் கீழ்கண்ட ஆவணங்களின் நகல்களையும் இணைத்து சமர்ப்பித்துள்ளார்.

| Sl.No. | Date | List of Documents |
|---|---|---|
| 1 | 30.12.2010 | Registered sale deed in the name of Kalaiselvi executed by Srinivasa Konar |
| 2 | 4.5.2011 | Proceedings of Ariyamangalam Asst. Commissioner regarding change of property tax register for the suit property in the name of Kalaiselvi |

| | | |
|---|---|---|
| 3 | 2013 | Residential certificate issued by Thasildar to the Kalaiselvi |
| 4 | 7.4.2014 & 6.4.2015 | Property Tax receipt |
| 5 | 6.5.2011 | Property Tax receipt |
| 6 | | Bunch of Telephone bills |
| 7 | | Bunch of Domestic gas receipts |
| 8 | | LIC Premium receipts |
| 9 | 11.1.2011 | E.C. for the period from 1.1.1986 to 10.1.2011 |
| 10 | 28.10.2013 | EC for the perod from 1.1.1986 to 27.10.2013 & 1.1.1986 to 6.12.2015 |
| 11 | 28.4.1988 | Registered sale deed in the name of Srinivasa Konar (prior document of title) |
| 12 | 4.10.2012 | F.I.R. copy |

11. <u>மின்குறை தீர்ப்பாளரின் தீர்ப்பு:</u>

11.1. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள் மற்றும் எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் திரு. சேதுராமன் அவர்களின் வாதங்கள் திரு. திருவேங்கடம் அவர்களின் வாதுரை ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து பார்க்கும்பொழுது கீழ்கண்டவைகள் இந்த வழக்கில் வழக்கெழு வினாக்களாக தெரிகின்றன.

(i) மேற்கண்ட மின்இணைப்பு எண்.**209–149–1411** வழங்கும்பொழுது ஒரு புதிய மின்இணைப்பை வழங்க வேண்டுமெனில் உரிமம்தாரர் பின்பற்றவேண்டிய விதிகள் என்ன ?

(ii) திரு. M.S. சேதுராமன் பெயரில் வழங்கப்பட்ட மின்இணைப்பு எண்.**209–149–1411** மேற்கண்ட விதிகளுக்கு இணங்க உள்ளதா ?

(iii) ஒரு மின்இணைப்பை துண்டிப்பு செய்ய விதிகளில் கூறப்பட்டுள்ளவை என்ன ?

(iv) மேல்முறையீட்டாளரின் வேண்டுகோளான மேற்கண்ட மின்இணைப்பை துண்டிக்க வேண்டும் என்பது ஏற்புடையதுதானா ?

**12.** **<u>வழக்கொழு வினா ஒன்றிற்கான தீர்வு</u>**

**12.1** ஒரு புதிய தாழ்வழுத்த மின்இணைப்பை பெறுவது சம்பந்தமான விதிகள் பற்றி அறிந்து கொள்ள மின் இணைப்பு வழங்கிய **11.10.2013** அன்று உள்ள பகிர்மான விதித்தொகுப்பின் விதி **27(3)** மற்றும் **27(4)**ஐ ஆராய வேண்டும். அந்த விதிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*"27. Requisitions for Supply of Energy :*
*xxx xxxx xxx*
*(3) The application for HT supply shall be in Form 4. Application for LT supply ( except Agricultural category) including Hut service shall be in Form 1 & 3 of Annexure III.*

*Note : Requisitions for supply of energy ( Applications), even if incomplete, and irrespective of whether they are handed over in person or by post, should be acknowledged in writing. If they are in order, they shall be registered immediately and acknowledged. If they are incomplete, the defects should be indicated and returned without registration.*
*(4). An intending consumer who is not the owner of the premises shall produce a consent letter in Form 5 of Annexure III to this code from the owner of the premises for availing the supply. If the owner is not available or refuses to give consent letter, the intending consumer shall produce proof of his/her being in lawful occupation of the premises and also execute an indemnity bond in Form 6 of the Annexure III to this code indemnifying the licensee against any loss on account of disputes arising out off effecting service connection to the occupant and acceptance to pay security deposit twice the normal rate."*

**12.2** மேற்கண்ட விதி **27(3)**இன் படி தாழ் அழுத்த மின்சார விவசாயம் தவிர்த்த விண்ணப்பங்கள் படிவம்–**1**ன் படியும் குடிசைக்கான மின்இணைப்பு கோரும் விண்ணப்பம் படிவம்–**3**ன் படியும் இருக்க வேண்டும்.

**12.3** இங்கு வழங்கப்பட்ட மின்இணைப்பு தாழ்வழுத்த மின்இணைப்பு என்பதால் அதற்கான விண்ணப்பபடிவம்–**1** கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*" FORM 1*
*Application Form for L.T. Service connection (except Agriculture and Hut)*
*FORM OF REQUISITION FOR SUPPLY OF LOW TENSION ENERGY ( SINGLE PHASE / THREE PHASE)*

*[Refer clause 27(3)]*

*To*
*The Designated Engineer*
*(Address of the Licensee)*

*Sir,*

*1. I hereby require you to supply electrical energy to the premises hereinafter described.*
*(Note this undertaking does not preclude a separate written contract being entered into, if so desired by the Licensee or the consumer.)*

*2. I agree to pay for said energy, service connection and other dues including the deposit of such security, meter rent, as may be demanded in accordance with the scale of rates prescribed under Tamil Nadu Electricity Distribution Code, Supply Code, notifications and orders issued in this regard by Tamil Nadu Electricity Regulatory Commission.*

*3. I wish to be charged under Tariff ………… under schedule of the TNERC tariff order dated.*

*4. I agree to take supply for …………….. years and utilize the energy in the premises described hereunder or outside the premises for my bonafide use.*

*5. In case I sell or otherwise dispose of the property / vacate the premises while the supply is continued, I agree to give one Calendar month notice in writing and pay all the arrears to the Licensee. Failing such notice, I hold myself responsible for energy consumed in the premises till such notice is given to the Licensee.*

*6. Description of the premises*

*Door No. and / or name of the house or premises*
*Street*
*Town / village and Taluk*
*Owned by (Name in Block letters)*
*Tenanted by (Name in block letters)*

*Applicant's correspondence address*

*7. The following are my requirements*

| *(A) Lighting* | *Number of Point's* | *Wattage of point's* | *Total wattage* |
|---|---|---|---|
| *(i) Lights* | - | - | - |
| *(ii) Fans* | - | - | - |
| *(iii) Convenient wall plugs* | - | - | - |
| *(B) Domestic electrical apparatus:* | | | |
| *(i) Cookers* | - | - | - |
| *(ii) Water heaters* | - | - | - |
| *(iii) Refrigerator* | - | - | - |
| *(iv) Air Conditioners* | | | |
| *(v) Other purpose* | - | - | - |
| *(vi) Convenience wall plugs* | | | |

*(C) Power Loads*

*(i) Domestic*
*(ii) Industrial*
*(iii) Welding*
*(iv) Other purposes*
*(v) Convenient Wall Plugs*
*Demand applied for in KW*

*The wiring has been completed on :*

*Signature of the Consumer*
*105*

*Place*

*Date*

*Note : The application shall be accompanied with the following documents:*

*(i) Proof of ownership (sale deed or property / water / sewerage tax receipt)*

*(ii) Consent letter from owner wherever applicable*

*FOR LICENSEE'S USE ONLY*

*Application registered as No. dated*

*Note.1. In case of transfer of the service, fresh application should be signed by the transferee (or a letter signed by both the transferor and transferee, agreeing to the above conditions for transfer should be obtained).*

*2. Additions or omissions to the connected load to be notified to the Licensee before effecting the electricity connections.*

*PRECAUTION TO BE ADOPTED BY CONSUMER S, OWNERS, ELECTRICAL CONTRACTORS, ELECTRICAL WORKMEN,*
*AND OTHER SUPPLIERS OF ENERGY*

*No electrical installation work, including additions, alterations, repairs and adjustments to existing installations except such replacement of lamps, fans, fuses, switches and other component parts of the installations as in no way alter its capacity or character shall be carried out upon the premises or on behalf of any consumer or owner for the purpose of the supply of energy to such consumer or owner, except by an authorized person specified by the Authority."*

**12.4** ஒழுங்குமுறை ஆணையத்தால் வடிவமைக்கப்பட்ட விவசாயம் தவிர்த்த தாழ்வழுத்த மின்இணைப்பு கோரும் விண்ணப்ப படிவத்தில் கீழ்கண்ட ஆவணங்கள் இணைக்கப்படவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

(i) உரிமைச்சான்று (விற்பனை பத்திரம் அல்லது சொத்து/தண்ணீர் வடிகால் வரியின் பற்று சீட்டு)

(ii) உரிமையாளரது சம்மதக்கடிதம் தேவைப்பட்டால்

**12.5** தமிழ்நாடு மின்பகிர்மான விதி27(4)இன் படி ஒரு இடத்தின் உரிமையில்லாத மின்இணைப்பு கோரும் நுகர்வோர் அதை பெறுவதற்கு பகிர்மான விதித்தொகுப்பின் மின்இணைப்பு III–ல் உள்ள படிவம் 5இன் படியான சம்மதக் கடிதத்தை பின்இணைப்பு IIIல் உரிமையாளரிடமிருந்து பெற்றுத்தரவேண்டும். சொத்தின் இருப்பிடத்தின் உரிமையாளர் இல்லை என்றாலும் அல்லது அவர்

மின்இணைப்பை குடியிருப்போர் பெயரில் வழங்க சம்மதக் கடிதம் தரமறுத்து விட்டாலும் சட்டப்படி அந்த இருப்பிடத்தில் குடியிருப்போர் என்பதற்கான சான்றை மின்இணைப்பை கோரும் நுகர்வோர் சமர்ப்பிக்க வேண்டும். மேலும், படிவம்–6ன் படியான காப்புறுதி பத்திரம் (Indemnity Bond) சமர்ப்பிக்கவேண்டும். மேலும், இயல்பான காப்புத்தொகையைப்போல் இருமடங்கு காப்புத்தொகை செலுத்தவேண்டும் என்று அறிய முடிகிறது.

## 13. <u>வழக்கெழுவினா இரண்டிற்கான தீர்வு</u>

13.1 மேல்முறையீட்டாளரின வாதங்களை தொகுத்து பார்க்கும்பொழுது திரு. எஸ். சேதுராமன் பெயரில் Tariff-வல் வழங்கப்பட்ட மின்இணைப்பு எண்.209–149–1411 விதிகளின்படி இல்லை என்பதற்கு கீழ்கண்ட வாதங்களை எடுத்துரைத்துள்ளார்.

(i) மேல்முறையீட்டாளர் திருமதி. ஜி. கலைச்செல்வி அவர்கள் திருச்சி மாவட்டம், செங்குள கிராமம், புதிய வார்டு–I, பிளாக் எண்.35க்கு டி.எஸ். எண்.2302, புதிய டி.எஸ்.எண்.40/1Aல் 1575 சதுரஅடி உள்ள இடத்தை திரு. ஜி. சீனிவாசன் அவர்களிடமிருந்து கிரைய சாசனமுலம் பெற்று உள்ளார் என்றும் எனவே, மின்இணைப்பு கொடுக்கப்பட்டுள்ள இடம் அவருக்கு சொந்தமானது என்று வாதிட்டுள்ளார்.

(ii) சட்டம் 32 of 1959–ன் பிரிவு 12(6)ன் படி ஒரு குடியிருப்பவர் என்பவர் சட்டப்படி அந்த இடத்தில் குடியிருப்பவர் ஆவார். (Occupier) means a person in lawful occupation of that building) ஆனால், திரு. எஸ். சேதுராமன் மற்றும் அவர்களின் வகையறாக்கள் மீது குற்றவழக்கு பதிவு செய்யப்பட்டு குற்ற எண்.929/2012 திருச்சி குற்றவியல் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ளது முதல் தகவலறிக்கை போடப்பட்டு குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் அத்துமீறி நுழைந்தவருக்கு கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர் என்ற நிலையில் மின்இணைப்பு வழங்கியது தவறு என்று வாதிட்டுள்ளார்.

(iii) பொறுப்புறுதி ஆவணம் தேதி மாதம் ஆண்டு முத்திரைதாள் பெற்றவரின் பெயர் சாட்சிகளின் முழுமையான முகவரி இல்லாமலும் சொத்தின் உடைமையாளர் திரு. எஸ். சேதுராமன் என்றும் அவருக்கு அவரே மின்இணைப்பு பெற அனுமதி மறுக்கப்பட்டுள்ளது என்பதால் பொறுப்புறுதி ஆவணம் (Indemnity Bond) பெறப்பட்டுள்ளது என்றும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட பொறுப்புறுதி ஆவணம் செல்லத்தக்கது அல்ல என்று வாதிட்டுள்ளார்.

13.2 எதிர்மனுதாரர் திரு. எஸ். சேதுராமன் பெயரில் மின்இணைப்பு வழங்கியது சரிதான் என்பதற்கு கீழ்கண்ட வாதங்களை முன்வைத்துள்ளனர்.

(i) எதிர்மனுதாரர் அவர்கள் மேற்கண்ட மின்இணைப்பு திரு. எஸ். சேதுராமன் அவர்கள் சமர்ப்பித்துள்ள கீழ்கண்ட ஆவணங்களை பெற்றுக்கொண்டு வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

(a) திருமதி. முத்துலட்சுமி அவர்களின் செட்டில்மெண்ட்

(b) திருமதி. முத்துலட்சுமி அவர்களின் உயில்

(c) திருமதி. முத்துலட்சுமி அவர்களின் இறப்புச்சான்றிதழ்

(d) மண்டல துணை வட்டாட்சியர் வழங்கிய இருப்பிடச்சான்று

(e) ஆதார் அட்டை

(f) OS No.85/2008ன் decree

(g) Indemnity Bond

13.3 மேலும், மின்இணைப்பை வழங்கியபொழுது இருந்த உதவி பொறியாளர் திரு.திருவேங்கடம் அவர்கள் அந்த இடத்தை அவர் ஆய்வு செய்து திரு.எஸ்.சேதுராமன் அவர்களிடம்தான் அந்த சொத்து உள்ளதையும் அவர் அந்த சொத்தை அனுபவித்து வருவதையும் உறுதி செய்து கொண்டபின்புதான் மின்இணைப்பு வழங்க பட்டது என்று தெரிவித்துள்ளார்.

13.4 மேலும், திரு.திருவேங்கடம் அவர்கள் O.S.No.85/2008ன் decreeன் படி அவருக்கு 1/3rd சொத்து திரு.சேதுராமனுக்கு உரிமை என்பதாலும் அந்த சமயத்தில் அந்த தீர்ப்பின் மீது மேல்முறையீடு எதுவுமில்லாததாலும் அவர் உரிமையாளர் மற்றும் சட்டப்படி வசிப்பவர் என்று Indemnity Bondல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, அது சரிதான் என்றும் வாதிட்டுள்ளார்.

13.5 மேலும், மின்இணைப்பு கொடுக்கப்பட்டு 25 நாட்கள் கழிந்த பின்புதான் மேல்முறையீட்டாளர் திருமதி. கலைச்செல்வி அவர்கள் தன்னுடைய ஆட்சேபனையை தெரிவித்துள்ளார் என்றும் மின்இணைப்பு கொடுப்பதற்கு முன்பு தெரிவிக்கவில்லை என்றும் வாதிட்டுள்ளார்.

13.6 இது சம்பந்தமாக மின்இணைப்பை பெற்றுள்ள திரு. எஸ். சேதுராமனின் வாதங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(i) திரு. எஸ். சேதுராமன் அவர்கள் அவரின் பெயரில் அந்த இடத்தில் தமிழ்நாடு மின்வாரிய அலுவலர்களால் ஆய்வு செய்யப்பட்டு ஆவணங்களின் உண்மைத்தன்மை ஆராயப்பட்டு வயரிங் கட்டிடத்தில் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அறிந்துதான் வழங்கப்பட்டுள்ளது என்று வாதிட்டுள்ளார்.

(ii) மேலும், ஒரு குற்றவழக்கு பதியப்பட்டுள்ளது என்பதால் குற்றம் நடந்துள்ளது என்று கூறுமுடியாது. மேற்கண்ட குற்றவியல் வழக்கு எண்.929/2012 நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ளது என்றும் தான் அந்த வழக்கை எதிர்த்து வழக்காடி கொண்டிருப்பதாகவும் வாதிட்டுள்ளார். மேலும், அதேபோன்ற குற்றவியல் வழக்கு 930/12 நாள் 1.10.2012 அதே நீதிமன்றத்தில் மேல்முறையீட்டாளர் மற்றும் அவரின் கணவருக்கும் எதிராக தன்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் வாதிட்டுள்ளார்.

(iii) அந்த Indemnity Bondஐ தன்னால் கொடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் ஒப்புக்கொள்வதால் அது பொய்யான ஆவணம் அல்ல அதில் உள்ள clerical/technical பிழைகளை எப்பொழுது வேண்டுமானாலும் சரிசெய்து கொள்ளப்படலாம் . எனவே, அதை பெரிய தவறு என்று

கருதவேண்டியது இல்லை. அதில் சம்பந்தப்பட்டுள்ள இருவரும் அதை ஏற்றுக் கொள்ளும்பொழுது அதில் ஒன்றும் தவறு இல்லை என்று வாதாடியுள்ளார்.

13.7 என்னுடைய வழக்கெழுவினா ஒன்றிற்கான தீர்வின்படி ஒரு தாழ்வழுத்த மின்இணைப்பு அதில் குடியிருப்பவர் என்ற முறையில் வழங்கவேண்டும் எனில் கீழ்கண்ட விதிகள் கடைபிடிக்கப்படவேண்டும் என்று தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

(i) ஒழுங்குமுறை ஆணையத்தால் வடிவமைக்கப்பட்ட தாழ்வழுத்த விண்ணப்பப் படிவம்

(ii) உரிமையாளரின் சம்மதக்கடிதம் படிவம்–5ன் படி அல்லது சம்மதத்கடிதம் இல்லையெனில் மின்இணைப்பு வேண்டுபவர் அந்த இடத்தில் சட்டப்படியான குடியிருப்போர் என்பதற்கான ஆவணம் மற்றும்

(a) Indemnity Bond

(b) இயல்பான காப்புத்தொகையைப் போல் இருமடங்கு காப்புத்தொகை

13.8 என் முன்னால் உள்ள இந்த வழக்கில் எதிர்மனுதாரர் மின்இணைப்பு திரு. எஸ். சேதுராமன் அவர்களுக்கு அவர் சட்டப்படி குடியிருப்போர் என்ற முறையில் வழங்கியுள்ளதாக தெரிவித்து சமர்ப்பித்துள்ள ஆவணங்களை ஆராய்ந்து பார்க்கும்பொழுது அவர் சட்டப்படியான குடியிருப்போர் என்பதற்கு மண்டல துணை வட்டாட்சியர் திருச்சி அவர்களிடம் பெறப்பட்டுள்ள சான்றிதழை சமர்ப்பித்துள்ளார். அந்த சான்றிதழின் உண்மை நகல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"RESIDENCE CERTIFICATE*
*(Not for pass port)*

*This is to Certify that Thiru./Tmt./Selvi/.M.S. சேதுராமன், Son/~~daughter~~ of சீனிவாசன் at presently ~~permanently~~ Residng at No.45/1, கீழப்புதூர் 6வது தெரு, பாலக்கரை, திருச்சி–1 27, செங்குளம் Village திருச்சி –1*

*Taluk* *District Tiruchirappalli, TamilNadu State*

*Place :* *Signature*

*Date :* *ஒப்பம் / x x x xx*
*Zonal Deputy Tahsildar"*

13.9 மேற்கண்ட சான்றின்படி மண்டல துணை வட்டாட்சியர்/திருச்சிராப்பள்ளி அவர்கள் மின்இணைப்பு வழங்க கோரும் No.45/1 கீழப்புதூர், 6வது தெரு, பாலக்கரை, திருச்சி–1 , 27, செங்குளம் கிராமம், திருச்சி–1 தாலுகாவில் திரு. M.S. சேதுராமன் அவர்கள் தற்பொழுது குடியிருந்து வருகிறார் என்று 11.2.2013 அன்று சான்றிதழ் அளித்துள்ளார். மின்இணைப்பு விண்ணப்பம் 24.9.2013 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

13.10 மேலும், திரு. சீனிவாசன் அவர்கள் அளித்துள்ள ஆதார் அட்டையிலும் மேற்கண்ட முகவரி உள்ளது. ஆனால், அட்டை எப்பொழுது கொடுக்கப்பட்டது என்ற விபரங்கள் இல்லை.

13.11 மின்சார பகிர்மான விதித்தொகுப்பில் ஒருவர் சட்டபூர்வமான குடியிருப்பவர் என்பதற்கான ஆவணங்கள் எவை என்பதை மேற்கண்ட மின்இணைப்பு வழங்கும்பொழுது வரையறுக்கவில்லை (தற்பொழுது 7.10.2014 நாளிட்ட ஒழுங்குமுறை ஆணையத்தின் உத்தரவுபடி அவை எவை என விதிகளில் தெரியப்படுத்தப்பட்டுள்ளது). எனவே, ஒரு வருவாய் அதிகாரியான மண்டல துணை வட்டாட்சியர் திரு. M.S.சேதுராமன் மேற்கண்ட முகவரியில் தற்பொழுது (Presently) குடியிருக்கிறார் என்று உறைவிட சான்று வழங்கியுள்ளதால் எதிர்மனுதாரர் அதை சட்டப்படி குடியிருப்பவர் (legal occupier) என்ற சான்றாக எடுத்துள்ளேன் என்ற வாதம் எனக்கு ஏற்புடையதாக உள்ளது.

13.12 அடுத்து Indemnity Bond பெறப்படவேண்டும். Indemnity Bond பெறப்பட்டுள்ளது. ஆனால் அதில் முத்திரைதாள் திரு. எஸ். சேதுராமன் பெயரில் இல்லை, உரிமையாளர் குடியிருப்பவர் இருவர் பெயரும் சேதுராமன் என்றும் சாட்சிகளின் முகவரியில்லை என்றும் தேதி குறிப்பிடப்படவில்லை என்றும் மேல்முறையீட்டாளரால் வாதிக்கப்பட்டு எனவே அது முறையான ஆவணம் அல்ல என்று வாதிடப்பட்டுள்ளது.

13.13 முத்திரைத்தாள், TNEB, Trichy என்ற பெயரில் வாங்கப்பட்டுள்ளளது என்று வாதிடப்பட்டுள்ளது. ஆனால், இப்பொழுது உரிமம்தாரர் TANGEDCO ஆகும். ஆனால்,

மேற்கண்ட Indemnity Bond, TNEB என்றுதான் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், எந்த தேதியில் மேற்கண்ட ஆவணம் execute செய்யப்பட்டுள்ளது என்பதும் தெரிவிக்கப்படவில்லை.

**13.14** மேல்முறையீட்டாளர் வாதிடுவது போல், உரிமையாளர் என்ற இடத்திலும் குத்தகைத்தாரர் என்ற வகையிலும் திரு. எம்.எஸ். சேதுராமன் பெயர்தான் குறிக்கப்பட்டுள்ளது. இங்கு உரிமை உடையவர் யார் என்பது பற்றிய வழக்குதான் நீதிமன்ற நிலுவையில் உள்ளன. எனவே, உரிமையாளர் யார் என்பது நீதிமன்ற தீர்விற்கு பின்புதான் முடிவு செய்ய முடியும். ஆனால், மேற்கண்ட மின்இணைப்பு பெறும் காலத்தில் O.S.No.85/2008ன் தீர்வின்படி திரு.சீனிவாசனுக்கு **1/3** பங்கு (**1/3**$^{rd}$) சொந்தம் என்று வாதிடப்படுகிறது. அப்பொழுது உரிமை பற்றிய வழக்குகள் எதுவும் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்நிலையில், அவரின் பெயருடன் மற்ற உரிமையாளர்களின் பெயர்களையும் சேர்த்திருக்க வேண்டும் (Incorporate) அவ்வாறு செய்யப்படவில்லை. இது தவறு தான்.

**13.15** மேற்கண்ட பத்தியிலுள்ள தகவல்களின்படி Indemnity Bond பெறப்பட்டுள்ளது. ஆனால், அதில் தவறுகள் உள்ளன. சரியாக ஆய்வு செய்யாமல் மேற்கண்ட ஆவணத்தை தவறுகளுடன் ஒப்புக்கொண்டது தவறு ஆகும். மேற்கண்ட தவறு ஒரு ஆவணத்தை தயாரிக்கும் பொழுது ஏற்பட்டுள்ள clerical error ஆகும். இதில், காப்புறுதியாளரான திரு. எஸ். சேதுராமன் அவர்கள், அவர்தான் அந்த காப்புறுதி பத்திரம் அளித்தவர் என்று ஒத்துக்கொள்வதால் அதிலுள்ள சரத்துகளுக்கு அவர் கட்டுப்பட்டவர் ஆவார். எனவே, Indemnity Bond–ல் உள்ள clerical error காரணமாக மின்இணைப்பை கொடுத்தது தவறு என்று கூறமுடியாது என்று நான் கருதுகிறேன்.

**13.16** மேலும், அடுத்த விதி இரண்டு மடங்கு காப்பீட்டுத்தொகை பெறப்படவேண்டும். இந்த மின்இணைப்பு வழங்கும்பொழுது பெறப்பட்ட காப்பீட்டுததொகை ரு.**600/–** ஆகும். ஒரு ஒருமுனை ,இணைப்பிற்கு M.P.No.41 of **2003–**ல் உள்ள தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய ஆணையின் அட்டவணை **11(9)–**ன் படி பெறப்படவேண்டிய காப்பீட்டுத்தொகை ரூ.**200/–** ஆகும்.

எனவே, பெறப்படவேண்டிய தொகை 2 x 200 = 400 ஆகும். ஆனால், இந்த மின்இணைப்புக்கு காப்பீட்டு தொகை ரூ.400/—க்கு பதில் அதிகமாக ரூ.600/— பெறப்பட்டுள்ளது. பெறப்பட்டுள்ள தொகை இரண்டு மடங்கிற்கு பதில் மூன்று மடங்கு என்று தெரிகிறது.

**13.17** எனவே, மின்இணைப்பு மின்சார பகிர்மான விதித்தொகுப்பின் விதி 27(4)ன் படி தான் கொடுக்கப்பட்டுள்ளது என்று தீர்வு செய்யப்படுகிறது.

**14. <u>வழக்கெழு வினா மூன்றிற்கான தீர்வு</u>**

**14.1** இந்த வழக்கின் மேல்முறையீட்டாளர் மேற்கண்ட மின்இணைப்பு எண்.209—149—1411ஐ மின்துண்டிப்பு செய்யவேண்டும் என்று கோரியுள்ளார். எதிர்மனுதாரர் மேற்கண்ட மின்இணைப்பின் உரிமையாளர் மின்கட்டணத்தை சரியாக செலுத்தி வருவதால் மேற்கண்ட மின்இணைப்பை மின்துண்டிப்பு செய்ய முடியாது என்று வாதிட்டுள்ளார். இது சம்பந்தமாக நான் மின் வழங்கல் விதித்தொகுப்பின் விதி 21, 23A(1A) மற்றும் மின்சார பகிர்மான விதித்தொகுப்பின் விதி எண்.33 ஆகியவற்றை ஆராயவேண்டும். எனவே, அந்த விதிகள் விதித்தொகுப்பிலுள்ளவாறு கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*“ 21. DISCONNECTION OF SUPPLY Section 56 of the Act with regard to disconnection of supply in default of payment reads as follows : (1). Where any person neglects to pay any charge for electricity or any sum other than a charge for electricity due from him to a Licensee or the generating company in respect of supply, transmission or distribution or wheeling of electricity to him, the Licensee or the generating company may, after giving not less than fifteen clear days notice in writing, to such person and without prejudice to his rights to recover such charge or other sum by suit, cut off the supply of electricity and for that purpose cut or disconnect any electric supply line or other works being the property of such Licensee or the generating company through which electricity may have been supplied, transmitted, distributed or wheeled and may discontinue the supply until such charge or other sum, together with any expenses incurred by him in cutting off and reconnecting the supply, are paid, but no longer :*

*Provided that the supply of electricity shall not be cut off if such person deposits, under protest,*

*(a) an amount equal to the sum claimed from him, or (b) the electricity charges due from him for each month calculated on the basis of average charge for electricity paid by him during the preceding six months. whichever is less, pending disposal of any dispute between him and the Licensee.*

*(2) Notwithstanding anything contained in any other law for the time being in force, no sum due from any consumer, under this section shall be recoverable after the period of two years from the date when such sum became first due*

*unless such sum has been shown continuously as recoverable as arrears of charges for electricity supplied and the Licensee shall not cut off the supply of the electricity. The provision of the Act as in sub-section (1) above are in addition to and not in derogation of any other law for the time being in force. Accordingly the Licensee shall be entitled to disconnect the supply of electricity subject to the provisions of Water (Prevention and Control of Pollution) Act, 1974, Air (Prevention and control of pollution) Act, 1981 and Environment (Protection) Act, 1986, etc.*

**14.3** மேற்கண்ட விதியினை கூர்ந்து ஆராயும் பொழுது நாம் அறிவது ஒரு மின் இணைப்பின் மின்சார கட்டணம் அல்லது அது தொடர்பான மின்சார கட்டணம் அல்லாத வேறு தொகையாகவோ அமைந்த நிலுவைகளைக் கட்ட மின்நுகர்வோர் புறக்கணித்தால் உரிமம்தாரர் எழுத்து மூலமாக சரியாக 15 நாட்களுக்கான எச்சரிக்கை அறிவிப்பு கொடுத்துவிட்டு அவருக்குரிய மின்கட்டணத்தை அல்லது வேறு பிற தொகையை வழக்கு மூலம் மீட்பதற்கு குந்தகம் இல்லாதபடி மின் வழங்கலை துண்டிக்கலாம் என்று தெரிகிறது. மேலும், உரிமதாரர் நீர் (மாசு தவிர்ப்பு கட்டுப்பாட்டுச்) சட்டம் 1974 காற்று, மாசு தவிர்ப்பு மற்றும் கட்டுப்பாட்டுச்) சட்டம் 1981 . மேலும், சுற்று சூழல் (மாசு தவிர்ப்பு மற்றும் கட்டுப்பாட்டுச்) சட்டம் 1986 போன்ற பிற சட்ட விதிகளுக்கு உட்பட்டும் மின் வழங்கலை துண்டிப்பு செய்யலாம் என்றும் தெரிகிறது.

*“Chapter 4. Tampering, Distress or Damage to electrical plant, Meter etc,.*

*‘(A) Tampering of meters and theft of electricity*
xxx xxx xxx

*(1A) Without prejudice to the provisions of this Act, the licensee or supplier, as the case may be, may, upon detection of such theft of electricity, immediately disconnect the supply of electricity::–*

xxx xxx xxx
xxx xxx xxx ”

**14.4** மேற்கண்ட விதியை படிக்கும்பொழுது நாம் அறிவது, விதி 23(A) (IA)ன்படி ஒரு மின் இணைப்பில், மின்திருட்டு ஏதேனும் கண்டுபிடிக்கப்பட்டாலும், மின் இணைப்பை துண்டிக்கலாம் என்று தெரிகிறது.

***“ 25. Power for Licensee to enter premises and to remove fittings or other apparatus of Licensee***

*(1) Section 163 of the Act provides for the powers for Licensee to enter premises and reads as:*

*(1) A Licensee or any person duly authorized by a license may, at any reasonable time, and on informing the occupier of his intention, enter any premises to which electricity is, or has been, supplied by him, of any premises or land, under, over, along, across, in or upon which the electric supply-lines or other works have been lawfully placed by him for the purpose of—*

*(a) Inspecting, testing, repairing or altering the electric supply-lines, meters, fittings, works and apparatus for the supply of electricity belonging to the Licensee; or*
*(b) Ascertaining the amount of electricity supplied or the electrical quantity contained in the supply; or*
*(c) Removing where a supply of electricity is no longer required, or where the Licensee is authorized to take away and cut off such supply, any electric supply-lines, meters, fittings, works or apparatus belonging to the Licensee.*

*(2) A Licensee or any person authorized as aforesaid may also, in pursuance of a special order in this behalf made by an Executive Magistrate and after giving not less than twenty-four hours notice in writing to the occupier, —*

*(a) enter any premises or land referred to in sub-section (l) for any of the purposes mentioned therein;*

*(b) enter any premises to which electricity is to be supplied by him, for the purpose of examining and testing the electric wires fittings, works and apparatus for the use of electricity belonging to the consumer.*

*(3) Where a consumer refuses to allow a Licensee or any person authorized as aforesaid to enter his premises or land in pursuance of the provisions of sub-section (l) or, sub-section (2), when such Licensee or person has so entered, refuses to allow him to perform any act which he is authorized by those sub- sections to perform, or fails to give reasonable facilities for such entry of performance, the Licensee may, after the expiry of twenty-four hours from the service of a notice in writing on the consumer, cut off the supply to the consumer for so long as such refusal or failure continues, but for no longer."*

**14.5** மேற்கண்ட விதியினை கூர்ந்து படிக்கும்பொழுது நாம்அறிவது உரிமம்தாரரோ அல்லது உரிமம்தாரரால் அதிகாரம் பெற்ற வேறு ஒருவரோ, துணைப்பிரிவுகள் 1, 2–இல் சொல்லப்பட்டுள்ள செயல்களை நிறைவேற்றுவதற்காக வளாகத்திற்குள் நுழைய நுகர்வோர் மறுப்பு தெரிவித்தாலோ அல்லது வளாகத்திற்குள் நுழைந்த பின்பு மேலே குறிப்பிட்ட துணைப்பிரிவுகளில் அதிகாரம் வழங்கப்பட்ட செயல்களை நிறைவேற்ற இசையாவிட்டாலோ அல்லது அவ்வாறு நுழைந்து செயல்படும் போது தக்க வசதிகளை தரமறுத்தாலோ 24மணி நேர அறிவிப்பு கொடுத்து மின்னிணைப்பை துண்டிக்கலாம் என்று தெரிகிறது.

**14.6** மேலும், இது சம்பந்தமாக தமிழ்நாடு மின்பகிர்மான விதித்தொகுப்பின் விதி **33** கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

***"33. AGREEMENTS :-***

*xxx xxxx xxxx*

*(3) The agreement can be terminated by the consumer at any time by giving one month's notice in writing to the Licensee expressing his/her intention to do so.*

*(4) The Licensee can terminate the agreement of a consumer at any time by giving one month's notice if the consumer has violated the terms of the agreement or the terms and conditions of this Code or the provisions of any law relating to the agreement including the applicable Acts and Rules under the Act and other orders from time to time. [1][The Licensee shall inform the consumer regarding the grounds for such termination] It is obligatory on the part of the Licensee to inform the consumer regarding the grounds for such termination."*

**14.7** மேற்கண்ட மின்சார பகிர்மான விதித் தொகுப்பின் விதி **33(3)** ஐ கூர்ந்து படிக்கும் பொழுது நாம் அறிவது, நுகர்வோர், தன்னுடைய இசைவு பத்திரத்தை முடித்துக் கொள்ள விரும்பினால் (Termination of Agreement) உரிமம்தாரருக்கு ஒரு மாத அறிவிப்பை தர வேண்டும் என்று தெரிகிறது.

**14.8** மேற்கண்ட மின்சார பகிர்மான விதித்தொகுப்பின் விதி **33(4)**இன்படி நுகர்வோர், இசைவு பத்திரத்திலுள்ள உடன்படிக்கைகளையோ, விதித் தொகுப்பின் விதிகளையோ மற்றும் வரையறைகளையோ, சட்டத்தின் கீழமைந்த சட்டங்களும், விதிகளும் உள்ளடக்கிய இசைவுப் பத்திரம் தொடர்பான எந்த ஒரு சட்டத்தின் விதி வகுப்புகளையோ அல்லது அவ்வப்போது வெளியிடும் வேறுபிற ஆணைகளையோ, மீறினால், அத்தகைய ஆணை மீறலை குறிப்பிட்டு ஒரு மாத அறிவிப்பை, உரிமம்தாரர் தந்துவிட்டு நுகர்வோர் செய்து கொண்ட இசைவு பத்திரத்தை முடித்துக் கொள்ளலாம் என்று தெரிகிறது.

14.9 மேலேயுள்ள பத்திகளில் உள்ள விபரங்களின்படி ஒரு மின்னிணைப்பில் மின்வழங்கல் விதி 21, 23A(1A) மற்றும் 25(3) ஆகிய விதி மீறல்கள் உள்ளது என்ற நிலையில் மின் துண்டிப்பு செய்யமுடியும் என்று தெரிகிறது. மேலும், தமிழ்நாடு மின்சார பகிர்மான விதித் தொகுப்பின் விதி33(4)—ன் படி இசைவு பத்திரத்தை முடித்து கொள்ளவேண்டும் என்று உரிமம்தாரர் அறிவிப்பு கொடுத்தும் ஒரு மின்இணைப்பின் இசைவு பத்திரத்தை முடித்துக் கொள்ள முடியும் என்றும், மற்றும் நுகர்வோர் மின்சார பகிர்மான விதித்தொகுப்பின் விதி 33(3)—ன் படி ஒரு மாத அறிவிப்பு கொடுத்தும் இசைவு பத்திரத்தை முடித்துக் கொள்ளமுடியும் என்றும் தெரிகிறது.

## 15. <u>வழக்கெழுவினா நான்கிற்கான தீர்வு</u>

15.1 இந்த மேல்முறையீட்டாளர் மின்இணைப்பு எண்.209—149—1411ஐ தவறான ஆவணங்கள் பெறப்பட்டு ஒரு அத்துமீறி நுழைந்தவர் பெயரில் குடியிருப்போர் என்ற முறையில் மின்இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. அது தவறு எனவே, துண்டிக்கப்படவேண்டும் என்று கோரியுள்ளார்.

15.2 மேலும், பெறப்பட்ட சட்ட ஆலோசனை இரண்டிலும் பெறப்பட்டுள்ள ஆதார் அட்டை, Residence Certiciate, ஆகியவற்றைப் பற்றியும் Indemnitty Bond-ல் உள்ள தவறுகள் பற்றியும் எந்த ஒரு கருத்தும் கூறப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும், மேற்கண்ட சொத்து தன்னுடைய பெயரிலுள்ளது என்பதற்கு ஆதாரமாக கீழ்கண்ட ஆவணங்களின் நகல்களையும் சமர்ப்பித்துள்ளார்.

(i) சீனிவாச கோனார் அவர்களிடமிருந்த திருமதி. கலைச்செல்வி மேற்கண்ட இடத்தை வாங்கியுள்ளார் என்பதற்கான 30.12.2010 நாளிட்ட விற்பனை பத்திரம்

(ii) 4.5.2011 நாளிட்ட உதவி ஆணையர்/திருச்சி மாநகராட்சி அவர்களின் எம்.சீனிவாச கோனார் பெயரிலிருந்த திருமதி. ஜி. கலைச்செல்வியின் பெயருக்கு வரிவிதிப்பை மாற்றம் செய்த உத்தரவு

(iii) தலைமை இடத்து துணை வட்டாட்சியர் வழங்கிய இருப்பிட சான்று Residential Certificate

(iv) 7.4.2014 நாளிட்ட சொத்துவரி ரசீது 2014–15 ஆண்டுக்குரியது.

(v) 6.4.2015 நாளிட்ட சொத்துவரி ரசீது 2015–16 ஆண்டுக்குரியது.

(vi) 6.5.2011 நாளிட்ட சொத்துவரி ரசீது 2011–12 ஆண்டுக்குரியது.

(vii) 22.8.2015 நாளிட்ட தொலைபேசி பில்

(viii) LIC premium Demand notice dt.19.8.14

(ix) மேற்கண்ட சொத்திற்கான வில்லங்க சான்று 1.1.86 முதல் 1012011, 1.1.86 முதல் 27.10.2013 & 1.1.86 முதல் 6.12.2015 வரை.

15.3 மேற்கண்ட ஆவணங்களின்படி மேற்படி சொத்தின் வரிரசீது 4.5.2011 முதல் திரு. சீனிவாச கோனார் பெயரிலிருந்து மாற்றப்பட்டு திருமதி. கலைச்செல்வியின் பெயரில் போடப்பட்டு வருகிறது என்றும் 2015–16 வரையிலான சொத்துவரி ரசீது திருமதி. கலைச்செல்வியின் பெயரில் உள்ளன என்று அறியமுடிகிறது.

15.4 மேலும், தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திருச்சி (Head Quarters Deputy Tahsildar) அவர்கள் திருமதி. ஜி. கலைச்செல்வி அவர்கள் மேற்கண்ட இடத்தில் நிலையாக வசித்து வருவதாகவும் சான்று வழங்கியுள்ளார். அந்த சான்று வழங்கப்பட்ட நாள் சரியாக தெரியவில்லை. ஆனால், இதே போன்ற ஒரு Residential certiciate மண்டல துணை வட்டாட்சியர் (zonal Deputy Tahsildar, Trichy)அவர்களும் திரு. எஸ். சேதுராமன் பெயரில் வழங்கியுள்ளார் என்பதும் குறிபிடத்தக்கது ஆகும்.

15.5 மேலும், மேற்கண்ட இடத்தின் வில்லங்க சர்டிபிகேட்டும் திருமதி. ஜி. கலைச்செல்வியின் பெயரில் மின்இணைப்பு வழங்கப்பட்ட நிலம் உள்ளது என்பதற்கு ஆதாரமாக சமர்ப்பித்துள்ளார்.

15.6 மேற்கண்ட ஆவணங்கள் அவர் அந்த சொத்தின் உரிமையாளர் என்பதற்கு ஆதாரமாக அவர் சமர்ப்பித்துள்ளார். ஒரு சொத்தின் உரிமையை பற்றி தீர்வு செய்ய மின்குறைதீர்ப்பாளருக்கு அதிகாரம் இல்லை. தகுதிவாய்ந்த நீதிமன்றத்திற்கு தான் உண்டு. மேலும், இது சம்பந்தமாக வழக்குகள் நிலுவையில் உள்ளன என்றும் அறிய முடிகிறது.

15.7 இந்த வழக்கிலுள்ள மின்இணைப்பை மின்துண்டிப்பு செய்ய முடியுமா என்பது தான் என் முன்னால் உள்ள வினாவாகும். இந்த மின்இணைப்பு வழங்குவதற்கு திரு. சேதுராமன் குடியிருப்பவர் என்பதற்கு துணை மண்டல வட்டாட்சியரின் சான்று எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. ஆனால், அதேபோன்ற சான்றை மேல்முறையீட்டாளர் வருவாய் துறை அதிகாரியின் தலைமையிடத்து துணை வட்டாட்சியர்/திருச்சியிடமிருந்து பெற்று நிரந்தரமாக அங்கு உள்ளார் என்பதற்கு ஆதாரமாக சமர்ப்பித்துள்ளார். இரண்டு வருவாய்துறை அதிகாரிகளும் ஒரே இடத்தில் இரு வேறு நபர்களுக்கு இருப்பிடச் சான்று வழங்கியுள்ளனர். இதில் எது சரி, அல்லது இரண்டுமே சரியா என்பதை உரிய வருவாய்துறை அலுவலர்தான் முடிவு செய்ய முடியும்.

15.8 ஆனால், திருமதி. ஜி. கலைச்செல்வி அவர்களும் மின்இணைப்பை வழங்குவதற்கு முன்பு மேற்கண்ட சான்றுகளுடன் ஆட்சேபனை தெரிவித்து இருந்தால் உரிமம்தாரர் ஆராய்ந்து உரிய வருவாய்துறை அலுவலரின் சான்று பெற்று மின்இணைப்பை வழங்க ஏதுவாக இருந்திருக்கும். ஆனால், மின்இணைப்பை பெற்ற பின்புதான் ஒரு ஆட்சேபனை பெறப்பட்டுள்ளது. திருமதி. ஜி. கலைச்செல்வி அவர்கள் அந்த இடத்தில் இருப்பிடதாரர் ஆக இருந்திருப்பார் எனில் மின்இணைப்பை திரு. சேதுராமன் பெயரில் வழங்கும்பொழுது அவர் தன்னுடைய ஆட்சேபனை தெரிவித்திருக்க முடியும். ஆனால், 25 நாட்கள் கடந்த பின்புதான் ஆட்சேபனை பெறப்பட்டுள்ளது.

15.9 மேலும், மின்இணைப்பு வழங்கும் பொழுது கொடுக்கப்பட்டுள்ள வழக்கு எண்.85/2008–ன் தீர்வின்படி மேற்கண்ட வளாகத்தில் 1/3 பங்கு திரு. எஸ். சேதுராமன் அவர்களுக்கு சொந்தம் என்ற தீர்வின் நகலும் கொடுக்கப்பட்டுள்ளது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். மேலும், எதிர்மனுதாரர் அவரின் அரசு வழக்கறிஞரின் கருத்துரையின்படி திரு. சேதுராமன் பெயரில் வழங்கப்பட்ட மின்இணைப்பை தற்பொழுது துண்டிக்க வேண்டாம் என்றும், தகுதிவாய்ந்த நீதிமன்றம் அவ்வாறு உத்தரவு இடும்பொழுது மின்இணைப்பை துண்டிக்கலாம் என்று உள்ளது என்றும் மின்வாரிய சட்ட ஆலோசகரும் அரசு வழக்கறிஞர் அவர்களின் கருத்தைத்தான் ஆமோதித்து உள்ளார் என்றும் வாதிட்டுள்ளார்.

15.10 மேல்முறையீட்டாளர் அரசு வழக்கறிஞர் அவர்கள் எதிர்மனுதாரரின் வழக்கறிஞர் ஆவர். எனவே, அவரின் கருத்து மனச்சாய்வுடன் கொடுக்கப்பட்டுள்ளது. ஏற்புடையது அல்ல என்று வாதிட்டுள்ளார். மேலும், Residence certificate Adhar card மற்றும் Deed of Indemnity ஆகியவற்றை ஆராய்ந்து பார்க்காமல் கொடுக்கப்பட்ட கருத்துரு என்றும் அந்த மூன்று ஆவணங்கள் தான் திரு. சேதுராமன் அவர்களால் மின்இணைப்பை பெறுவதற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் என்று மன்றத்தில் சொல்லப்பட்டது என்பதையும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப் படவில்லை என்று வாதிட்டுள்ளார். மேற்கண்ட வாதத்தையே வாரிய சட்ட ஆலோசகரின் கருத்துரைக்கும் எதிராக வைத்துள்ளார்.

15.11 எதிர்மனுதாரர் அரசு வழக்கறிஞர் மற்றும் வாரியத்தின் சட்ட ஆலோசகரின் கருத்துரைப்படி மின்இணைப்பை துண்டிக்க வேண்டியது இல்லை என்பதால் அந்த கருத்துருக்களின் சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

"*Under these circumstances in my considered opinion the Assistant Engieer is duty bound to grant service connection on the seeing the relevant documents. As on the date of effecting the electricity connection, as per the documents presented by the intending consumer, the intending consumer has title to the property. The subsequent*

*transactions were not brought to the knowledge of the Assistant Engineer. Even if brought to the knowledge the Assistant Engineer then as stated earlier the objector title is questionable since her vendor, namely Srinivasa Konar had no title as on the date of execution of the sale deed and also his vendor namely Jayyarama Konar, Vaithiyalinga Konar his sonSundram, Rengaraja Konar and his sons Chandrasekaran Gopal Elumalai had no title as on the date of execution of the sale deed. On execution of registered Settlement Deed dated 26.4.1965 the said Muthulakshmi is the absolute owner of the property and she has not executed any documents in favour of Kalaiselvi, but she has executed a Will in favour of Sethuraman. Therefore, in my opinion the allegation of the said Kalaselvi that the Assistant Engineer had effected service connection illegal is incorrect. In such event the service connection shall not be disconnected. The Board has power to disconnect the service connection only on limited circumstances. Therefore, if the objector obtains order to disconnect from the competent court, then the service connection shall be disconnected and until then the Board is directed to not to disconnect the service connection. Advised accordingly.”*

12.8.2015 நாளிட்ட மின் வாரிய சட்ட ஆலோசகரின் கருத்துரு

*“Considering the said detailed opinion rendered by the Standing Counsel by tracing the ownership claim of the rival parties even right from the year 1963 and the following decisions of the Hon’ble High Court, Madras in the matter of providing/continuing the electricity supply by the TNEB/now TANGEDCO, Legal Cell concurs with the view of the said Standing Counsel that the service connection provided to the subject premises in the name of Thiru. S. Sethuraman need not be disconnected in the present circumstances and such a course may be considered if there is a specific order of the competent Court to do so. This is more so because, the TANGEDCO is not the competent authority to deicde which one of document is valid in law and which one is not and it is for civil Court to deicde the dspute, if any between the parties but there is a duty to supply electricity under section 43 of the Electricity Act, 2003.”*

15.12 மேற்கண்ட இரண்டு கருத்துருக்களின்படியும், மின்இணைப்பை தகுந்த வாய்ந்த நீதிமன்றத்தின் ஆணையின்படிதான் மின்துண்டிப்பு செய்யமுடியும் என்று தெளிவு படுத்தப்பட்டுள்ளது.

15.13 என்முன்னால் உள்ள இந்த வழக்கில் சம்பந்தப்பட்டுள்ள சொத்தின் உரிமை பற்றிய வழக்கு எண்.O.S. No.85/2008 நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ளது என்று தெரிகிறது.

15.14 மேலும், என்னுடைய வழக்கெழு வினா இரண்டிற்கான தீர்வின்படி மின்இணைப்பு திரு. எஸ். சேதுராமன் பெயரில் குடியிருப்போர் என்ற முறையில் வழங்கியது அவர் சமர்ப்பித்த ஆவணங்களின்படி சரி என்று தீர்வு செய்யப்பட்டுள்ளது. எனவே, மின்இணைப்பு வழங்கப்பட்ட சொத்தின் உரிமை பற்றிய வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ளதாலும் மின்இணைப்பு வழங்கும்பொழுது சமர்ப்பித்த ஆவணங்களின்படி மின்இணைப்பை பெற்ற திரு. எஸ். சேதுராமன் அவர்கள் அங்கு குடியிருப்பவர் என்பதற்கு ஆதாரமாக மண்டல துணை வட்டாட்சியர் அவர்களின் சான்று அளித்திருப்பதாலும், மின்சாரம் ஒரு அடிப்படை தேவை என்பதாலும் அந்த மின்இணைப்பை திரு. எஸ். சேதுராமன் அவர்கள் தற்பொழுதும் உபயோகித்து வருவதாலும் மின்இணைப்பை துண்டிப்பு செய்யவேண்டும் என்பதற்கு வழக்கெழுவினா மூன்றின் தீர்விலுள்ளள காரணங்கள் ஏதுமில்லாததாலும் மேற்கண்ட மின்இணைப்பை துண்டிப்பு செய்வது சம்பந்தமாக நிலுவையிலுள்ள சொத்து உரிமையின் மீது நடைபெறும் வழக்கின் முடிவு தெரிந்த பிறகு தீர்வு செய்யலாம் என்று தீர்வு செய்யப்படுகிறது.

16. <u>முடிவுரை</u>

16.1 திரு. எஸ். சேதுராமன் பெயரில் குடியிருப்போர் என்ற முறையில் மின்இணைப்பு வழங்கியது அவர் சமர்ப்பித்த ஆவணங்களின்படி சரி என்று வழக்கெழு வினா இரண்டிற்கான தீர்வின்படி தீர்வு செய்யப்பட்டுள்ளது. எனவே, மின்இணைப்பு வழங்கப்பட்ட சொத்தின் உரிமை பற்றிய வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ளதாலும் மின்இணைப்பு வழங்கும்பொழுது சமர்ப்பித்த

ஆவணங்களின்படி மின்இணைப்பை பெற்ற திரு. எஸ். சேதுராமன் அவர்கள் அங்கு குடியிருப்பவர் என்பதற்கு ஆதாரமாக மண்டல துணை வட்டாட்சியர் அவர்களின் சான்று அளித்திருப்பதாலும், மின்சாரம் ஒரு அடிப்படை தேவை என்பதாலும் அந்த மின்இணைப்பை திரு. எஸ். சேதுராமன் அவர்கள் தற்பொழுதும் உபயோகித்து வருவதாலும் மின்இணைப்பை துண்டிப்பு செய்யவேண்டும் என்பதற்கு வழக்கெழுவினா மூன்றின் தீர்விலுள்ள காரணங்கள் ஏதுமில்லாததாலும் மேற்கண்ட மின்இணைப்பை துண்டிப்பு செய்வது சம்பந்தமாக நிலுவையிலுள்ள சொத்து உரிமையின் மீது நடைபெறும் வழக்கின் முடிவு தெரிந்த பிறகு தீர்வு செய்யலாம் என்று தீர்வு செய்யப்படுகிறது.

16.2 மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண்.49/2015 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. G.கலைச்செல்வி,
க/பெ.கோபாலகிருஷ்ணன்,
45/1, கீழப்புதூர்,
பாலக்கரை,
திருச்சிராப்பள்ளி

2) செயற் பொறியாளர்/இ&ப/நகரியம்,
திருச்சி மின்பகிர்மான வட்டம்/மாநகரம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
தென்னூர்,
திருச்சி –17.

3) உதவி செயற் பொறியாளர் / இ &ப/பாலக்கரை,
திருச்சி மின்பகிர்மான வட்டம்/மாநகரம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
தென்னூர், திருச்சி –17.

4) உதவி பொறியாளர் / இ &ப/செந்தண்ணீர்புரம்,
திருச்சி மின்பகிர்மான வட்டம்/மாநகரம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
தென்னூர்,
திருச்சி –17

5) திரு. எஸ். சேதுராமன்,
த/பெ சீனிவாசன்,
45/1, கீழபுதூர் 6வது தெரு,
பாலக்கரை,
திருச்சிராப்பள்ளி–1

6) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

7) செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

8) உதவி இயக்குநர் (கணினி) – மின்குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.